# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. I Issue 8 November 2011

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்

பக்கம்


வாழ்க்கையில் சாதிப்பது .......... 2
இம்மாதச் செய்தி .......... 14
சாவித்ரி .......... 15
லைப் டிவைன் .......... 18
பூரணயோகம் - முதல் வாயில்கள் .......... 28
அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு .......... 31
தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் .......... 37
ஆன்மீக மற்றும் மனோதத்துவ ரீதியான கருத்துகளுக்கு உண்டான வரையறைகள் .......... 38
சரண்டர் சத்யன் .......... 40
அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் .......... 49
யோக வாழ்க்கை விளக்கம் VI .......... 57
அன்பர் கடிதம் .......... 61
லைப் டிவைன் - கருத்து .......... 63


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.


வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-


## ஜீவியத்தின் ஓசை

**அனுபவத்தில் இல்லாதது அகிலத்தில் இல்லை என்று கூற முடியாது. அனுபவத்தைக் கடந்ததை அறிவதே அறிவு.**

**வாய்ச் சொல் வையகம் முழுவதும் பரவும். வாய் பூமாதேவியின் மனம்.**

**கையிலுள்ளது கட்டுப்பட்டால் கையிலில்லாதவை கட்டுப்படும்.**

# வாழ்க்கையில் சாதிப்பது

N. அசோகன்

ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் வாழ்க்கையில் அவரவருக்குத் திருப்தி தரும் வகையில் ஏதேனும் அர்த்தமுள்ள சாதனை செய்ய வேண்டும் என்றுதான் விரும்புவார்கள். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்து நாட்டில் தொழிற்புரட்சி வந்து, எந்திரங்களின் உதவியுடன் உற்பத்தியைப் பெருக்கி தொழில் வளம் மற்றும் நாட்டின் பொருளாதார வளத்தை உயர்த்துவதற்கு முன்னால், உலகம் முழுவதும் இராஜவம்சத்தையும், பிரபு வம்சத்தையும் சேர்ந்தவர்களைத் தவிர பொதுமக்கள் என்று பார்த்தால் வசதி வாய்ப்பின்றி ஏழ்மையில்தான் இருந்தார்கள். தொழிற்புரட்சி வந்து நாட்டில் செல்வ வளம் உயர்ந்த பிறகும்கூட குடியாட்சி மூலம் வந்த சுதந்தரமும், கல்வி கற்கும் உரிமையும் பொதுமக்களுக்கு கிடைத்த பின்னர்தான் தாமும் வாழ்க்கையில் உயர முடியும் என்ற நம்பிக்கையே பொதுமக்களுக்கு வந்தது. ஆகவே நடைமுறையில் பார்த்தோம் என்றால் இரண்டாம் உலகப் போர் முடியும் வரையிலும் வாழ்க்கையில் பெருமளவு சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை காலனி ஆதிக்கத்தின்கீழ் இருந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலிருந்த பெருவாரியான குடிமக்களுக்கு இல்லாமல் இருந்தது. அதாவது உயிர் பிழைத்தால் போதும், இருப்பதற்கு ஓர் இடம், உடுப்பதற்கு ஒரு சில துணிமணிகள் மற்றும் மூன்று வேளை சாப்பிட சாப்பாடு கிடைத்தால் போதும் என்ற நிலையில்தான் மக்கள் வாழ்ந்து வந்தார்கள்.

ஆனால் இப்பொழுது நிலைமை முற்றிலும் மாறியிருக்கிறது. காலனி ஆதிக்கம் மறைந்து 60 வருடங்களுக்கு மேல் ஆகிறது. ஜனநாயக சுதந்தரம், அனைவருக்கும் படிப்புரிமை, அடிப்படை



மனித உரிமைகளுக்கான பாதுகாப்பு, சோஷலிச, பொருளாதார பாலிசிகளால் குடிமக்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் என்றிவற்றின் காரணமாக எந்தவொரு தனி மனிதனுக்கும் ஏராளமாக சாதிக்கக்கூடிய வாய்ப்புகள் வந்துவிட்டன. இன்று சமூகத்தில் கிடைக்கும் ஆதரவை வைத்துக் கொண்டு படிப்பு வாசனையே இல்லாத மக்களுடைய குழந்தைகள்கூட அவர்கள் விரும்பினால், படிப்பில் நல்ல கவனம் செலுத்தினால், M.A. லெவலில் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இம்மாதிரியே தாழ்த்தப்பட்ட ஜாதியில் பிறந்த பிள்ளைகள்கூட இன்று சற்று சுறுசுறுப்பாகவும் dynamicகாகவும் செயல்பட்டார்கள் என்றால் I.A.S. அதிகாரியாகவும் வருவதற்குக்கூட வாய்ப்புகளுண்டு. இன்றைய சமூகத்திலுள்ள பெருவாரியான மக்கள் பிரதானமாக சாதிக்க விரும்புவதே ஒரு சில குறிப்பிட்ட விஷயங்கள்தான். நல்ல வேலை, நிறைய வருமானம், நிறைய சேமிப்பு, நல்ல வீட்டு வசதி, பிள்ளைகளுக்கான நல்ல படிப்பு வசதி, பெண் பிள்ளைகளுக்கு நல்ல இடத்தில் திருமணம் மற்றும் சமூகத்தில் ஒரு நல்ல social status என்று இவற்றைத்தான் பெரும்பாலான மக்கள் நாடுகிறார்கள். அடைந்து காட்ட வேண்டுமென்று விரும்பி செயல்படுகிறார்கள். இப்படி, தான் விரும்பியவற்றை அடைவதற்குக் கடுமையாக உழைக்க முன்வருகிறார்கள். மேலும் ஏதேனும் ஒரு துறையில் செயல்படும் வகையில் படிப்பு மற்றும் பயிற்சி மூலம் தம்மைத் தயார் செய்து கொண்டு தாம் விரும்புகின்ற வருமானம், வீட்டு வசதி, கார் வசதி, சேமிப்பு என்றிவை எல்லாவற்றையும் அத்துறையில் சம்பாதித்துப் பெற்றுக் கொள்ள முடியுமா என்றும் பார்த்துக் கொள்கிறார்கள்.

பெருவாரியான மக்கள் இப்படியிருக்க ஏதோ ஒரு சிலர்தான் கோடிக்கணக்கில் சம்பாதிக்க வேண்டும், பிஸினஸ் சாம்ராஜ்ஜியம் நிறுவ வேண்டுமென்றும் மற்றும் அரசியலில் நுழைந்து M.L.A., M.P., மந்திரி என்று உயர வேண்டும் என்று பெரிய அளவில்

சாதிக்க விரும்புகிறார்கள். வெறும் கடின உழைப்பால் மட்டும் இவர்கள் இப்படி பெரிய அளவில் சாதிப்பதில்லை. கோடிக்கணக்கில் வருமானம் பார்க்க விரும்புகின்றவர்கள் மற்றவர்களைவிட வேகமாக சம்பாதிக்கும் ஒரு திறமையை வளர்த்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய சம்பாதிக்கும் வேலையை மற்றவர்களைப்போல் சிறிய அளவில்தான் இவர்களில் பல பேர் ஆரம்பிக்கின்றார்கள். உலகத்தின் பத்து பெரிய கோடீஸ்வரர்களில் ஒருவரான Bill Gates தன் வீட்டு கார் காரேஜில் இரண்டு கம்ப்யூட்டர்களை வைத்துக் கொண்டுதான் அவருடைய software பிஸினஸை தொடங்கினார் என்று ஒரு வதந்தி இருக்கிறது. அம்மாதிரியே ரிலையன்ஸ் பிஸினஸ் சாம்ராஜ்ஜியத்தை நிறுவிய Dhirubhai Ambani அவர்கள் துபாயில் ஒரு பெட்ரோல் பங்கில் வெறும் அக்கௌன்டண்ட்டாகத் தன்னுடைய careerஐ தொடங்கினார் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் ஆரம்பிக்கின்ற வேலை மற்றும் ஸ்தாபனம் தொடக்கத்தில் சிறிய அளவில் இருக்கின்றது என்றாலும் அதிவேகமாக அந்த வேலையும் ஸ்தாபனமும் பல மடங்கு பெருகி ஒரு பெரிய சாம்ராஜ்ஜியம் என்ற அளவிற்கு 15, 20 வருடங்களில் விரைவில் வளர்ந்துவிடுகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் அவர்கள் பணத்தின் விசேஷத் தன்மைகளை மற்றவர்களைவிட சிறப்பாகப் புரிந்து கொள்கிறார்கள். அம்மாதிரியே வேலையின் விசேஷத் தன்மைகளையும் புரிந்து கொள்கிறார்கள். அதாவது பணம் எப்படி உற்பத்தியாகிறது? என்ன செய்தால் அது அபிவிருத்தியாகும்? பணம் எதனால் கவரப்படுகிறது? பணத்தையும், வேலையையும் ஒன்றையொன்று அதிகரிக்கும் வகையில் இணைப்பது எப்படி? என்று இம்மாதிரியான பணத்தையும், வேலையையும் பற்றிய நுணுக்கங்களை மற்றவர்களைவிட சிறப்பாகப் புரிந்து கொள்கிறார்கள். Organisationனுடைய அபார வளர்ச்சித் திறனை இவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதுபோக எவ்வளவு பெரிய



வேலையாக இருந்தாலும் அதை நேர்த்தியாக செய்வதெப்படி என்று தெரிந்து வைத்துக் கொள்கிறார்கள். மேலும் எந்த வேலையாக இருந்தாலும் அந்த வேலையின் முக்கிய அம்சங்களைக் கவனிப்பது மட்டுமின்றி வேலையின் விவரங்கள் அதாவது detailsலிலும் perfectionஐக் கொண்டு வர பாடுபடுகிறார்கள். பணம் மற்றும் வேலையைதான் புரிந்து வைத்துக் கொள்கிறார்கள் என்று மட்டுமில்லை, யார் யாருடன் வேலை செய்கிறார்களோ, யாரையெல்லாம் வேலை வாங்குகிறார்களோ எல்லோருடைய மனித சுபாவத்தையும் நன்றாகப் புரிந்து வைத்துக் கொண்டு யார் எப்படி செயல்படுவார்கள், யாரை எப்படி கட்டுப்படுத்தி வைக்கலாம், யாரிடமிருந்து எப்படி ஆதாயத்தை பெற்றுக் கொள்ளலாம், தொந்தரவு செய்கிறவர்களை எப்படி ஒடுக்கலாம், அடக்கலாம் என்றெல்லாம் சரியாக மனிதர்களைப் புரிந்து வைத்துக் கொள்கிறார்கள். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் அவர்கள் செய்கின்ற வேலைகளும், மக்களுடைய தேவைகளும் எப்பொழுதுமே ஒரு alignmentடில் இருக்கும்படி பார்த்துக் கொள்கிறார்கள். இந்த alignment இருப்பதால் இவர்களுடைய வேலை வளரும் பொழுது, வருமானமும் கூடவே வளர்கிறது. அரசியலில் சாதிக்க விரும்புகின்றவர்களை எடுத்துக் கொண்டால் நல்ல leadership திறமையும், பேச்சாற்றலும் அடுத்தவர்களைக் கீழ்ப்படிய வைக்கும் commanding abilityயையும் இவர்கள் வளர்த்துக் கொள்கிறார்கள்.

பணம் மற்றும் அதிகாரத்தைத் தேடுபவர்கள் தவிர creativeவாக இலக்கியத்திலும், விஞ்ஞானத்திலும், கலைத் துறையிலும், விளையாட்டுத் துறையிலும் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ள ஒரு சிறிய மைனாரிட்டியும் இருக்கிறது. இவர்கள் வெறும் கடின உழைப்பு, புத்திசாலித்தனம், பண பலம், பதவி பலம் என்றிவற்றை மட்டும் நம்பி creativeவாக சாதிக்கவில்லை. இவர்களுக்கு ஒரு creativeஆன படைக்கும் திறன் அவசியம்.

ஆங்கிலத்தில் creative inspiration மற்றும் creative intelligence என்று சொல்வார்கள். ஆகவே இத்தகைய creative திறமைகள் கொண்டிருப்பவர்கள் பெரிய எழுத்தாளர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், கண்டுபிடிப்பாளர்களாகவும், சங்கீத மேதைகளாகவும், நடன கலைஞர்களாகவும், விளையாட்டு வீரர்களாகவும் பெயர் எடுக்கிறார்கள். இப்படி சமூகத்தில் பெருவாரியான மக்கள் பணம் சம்பாதிப்பது, பதவி பலத்தை நாடுவது, சமூக அந்தஸ்தைத் தேடுவது மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி பெயரையும், புகழையும் தேடுவது என்றிருந்தாலும் இவர்களிலிருந்து விதிவிலக்காக ஒரு சிறிய மைனாரிட்டி ஆன்மீக சாதனை புரிவதில் நாட்டம் கொண்டிருக்கிறது. இவர்களுக்குக் கடின உழைப்போ, அறிவு கூர்மையோ, கிரியேட்டிவ் இன்ஸ்பிரேஷனோ எதுவும் உதவாது. இவர்களுடைய ஆன்மீக சாதனைகளை நம்பிக்கை, பக்தி மற்றும் இறையார்வம் ஆகியவற்றை ஆதாரமாக வைத்து நிகழ்த்துகிறார்கள். ஆனால் இப்படி ஆன்மீகத் துறையில் சாதிக்க வேண்டும் என்று ஆர்வம் உள்ளவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவான ஒரு மைனாரிட்டியாக இருப்பதால் இவர்கள் சமூகத்தில் எப்படி சாதிக்கிறார்கள் என்பதும், சமூகத்தில் பணம், பதவி தேடுகின்ற மெஜாரிட்டியானவர்கள் எப்படிச் சாதிக்கிறார்கள் என்பதும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டிருக்காது.

வருமான விஷயத்தில் பொதுவாக கடின உழைப்பு, திறமை, பயிற்சி, பண முதலீடு மற்றும் டெக்னாலஜி ஆகியவைதான் உதவும் என்று இதுவரை உலகம் கருதி வந்துள்ளது. ஆனால் கடந்த 15, 20 வருடங்களாகச் சர்வதேச corporate பிஸினஸ் வட்டாரங்களில் பிஸினஸ் வருமானத்தை உயர்த்துவதற்கு valueக்கள் பெருமளவு உதவுகின்றன என்பதை மேனேஜ்மெண்ட் நிபுணர்கள் கண்டறிந்துள்ளார்கள். பெரிய multi-national corporationகளான கொக்கோ-கோலா, ஐ.பி.எம்., ஆப்பிள்



கம்ப்யூட்டர், Federal Express Courier Service மற்றும் Sears போன்ற பெரிய அமெரிக்க டிப்பார்ட்மெண்ட் ஸ்டோர்கள் எப்படி அபாரமாகச் சம்பாதிக்கின்றன என்று மேனேஜ்மெண்ட் நிபுணர்கள் கண்டறிய முற்பட்ட பொழுது அவர்களுக்குப் பெரிய அதிர்ச்சிக் காத்திருந்தது. கம்பனிகளின் தலைவர்கள் தங்களுடைய அபார வெற்றிக்குக் காரணம் தங்களுடைய பெரிய முதலீடு மற்றும் அபார உற்பத்தித் திறன் கொண்ட டெக்னாலஜி என்று முதலீட்டையும் டெக்னாலஜியையும் காரணம் காட்டுவார்கள் என்று நிபுணர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் இந்த ஸ்தாபனங்களின் தலைவர்களோ இவற்றைக் காரணம் காட்டவே இல்லை. மாறாகத் தாங்கள் நம்புகின்ற மற்றும் கடைபிடிக்கின்ற பிஸினஸ் valueக்கள்தான் அவர்களுடைய வெற்றிக்கும், சாதனைக்கும் காரணம் என்று திடமாகவும், முடிவாகவும் கருத்துத் தெரிவித்தார்கள். உதாரணமாக கொக்கோ கோலா கம்பனியினுடைய மேனேஜ்மெண்ட்டில் இருப்பவர்களின் பாலிஸி என்னவென்றால் கம்பனி எப்படி நன்றாகச் சம்பாதிக்கின்றதோ அந்தளவிற்குக் கம்பனியினுடைய distributorகளும், ஏஜெண்டுகளும் சம்பாதிக்க வேண்டும் என்பதுதான். இதன் காரணமாக distributorகளுக்கும் ஏஜெண்டுகளுக்கும் நல்ல profit margin மற்றும் discount வழங்குகிறது. இதனால் மகிழ்ந்துபோயுள்ள distributorகளும் ஏஜெண்டுகளும் கம்பனி வளர்ச்சிக்காகத் தங்களால் முடிந்த அளவிற்குத் தங்களுடைய ஒத்துழைப்பை வழங்குகிறார்கள். இதன் பலனாக கம்பனியின் ஆண்டு வருமானம் பில்லியன் டாலர் அளவிற்கு உயர்ந்துள்ளது. இதன் மூலம் என்ன தெரிகிறது என்றால் கோக் கம்பனியின் அபார வளர்ச்சிக்குக் காரணம் கம்பனிக்கும் distributorகளுக்கும் ஏஜெண்டுகளுக்கும் இடையேயுள்ள பரஸ்பர goodwillதான். ஐ.பி.எம். கம்பனியை எடுத்துக் கொண்டால் அவர்களுடைய productsஆன computer hardware மற்றும் office machinery ஆகியவற்றில் qualityயை maintain செய்வதில்

அவர்கள் மிகவும் தீவிரமாக உள்ளார்கள். Federal Express Courier Serviceஐ எடுத்துக் கொண்டால் அமெரிக்காவின் எந்தவொரு இடத்திலிருந்தும், எந்தவொரு இடத்திற்கும் மறுநாளே அவர்கள் சொன்ன நேரத்திற்குள் delivery செய்துவிடுகின்றார்கள். அப்படி நேரம் தவறினால் வாங்கியப் பணத்தைத் திருப்பி தந்துவிடுகிறார்கள். இந்த அளவிற்கு punctuality என்ற பிஸினஸ் valueவைக் கடைப்பிடிக்கிறார்கள். அமெரிக்காவின் முன்னணி கொரியர் நிறுவனமாக அவர்கள் தலையெடுப்பதற்குக் காரணமே punctualityக்கு அவர்கள் இப்படி வாங்கி இருக்கிற பெயர்தான். ஆப்பிள் கம்ப்யூட்டரை எடுத்துக் கொண்டால் அவர்களுடைய கம்ப்யூட்டர்கள் மற்றும் I Phone, I Pod போன்ற music சாதனங்கள் எல்லாமே மிகவும் user friendlyயாக இருக்கும். Customer satisfactionஐ அவர்கள் முக்கியமாகக் கருதுவதால் இப்படி அவர்களுடைய சாதனங்கள் எல்லாம் user friendlyயாக இருக்க வேண்டும் என்று பாடுபடுகிறார்கள். இண்டர்நேஷனல் லெவலில் மிகவும் பாப்புலராக ஆப்பிள் கம்ப்யூட்டர் இருப்பதற்குக் காரணமே இந்த customer satisfaction என்ற பிஸினஸ் valueதான். Sears Department Storesஐ எடுத்துக் கொண்டீர்கள் என்றால் அவர்கள் இந்த customer satisfaction என்ற பிஸினஸ் valueவை உச்சக்கட்டத்திற்கு எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். அவர்களிடம் வாங்கிச் செல்லும் எந்தப் பொருளும் கஸ்டமருக்குத் திருப்தியில்லை என்றால் அதைத் திருப்பி வாங்கிக் கொண்டு பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறார்கள். அவர்களுக்குக் கஸ்டமர்கள் குவிவதற்குக் காரணமே இந்த take back policyதான். இதன் காரணமாக Searsஇன் வருமானம் அதிகரிப்பதைக் கண்ட அமெரிக்காவில் உள்ள மற்ற டிப்பார்ட்மெண்ட் ஸ்டோர்களும்கூட இந்த buy back policyஐ கொண்டு வந்துவிட்டன. ஆகவே இந்தப் பெரிய MNCகளே தங்கள் வளர்ச்சிக்கு valueக்கள்தான் உதவியிருக்கின்றன என்று திடமாகச் சொல்லும்பொழுது quality



maintenance, customer satisfaction, on-time delivery, goodwill, சுத்தம், upto date accounts, சுமுகம் மற்றும் நேர்மை போன்ற valueக்கள் பிஸினஸ் நிறுவனங்களின் சாதனைகளை உயர்த்த முக்கியக் காரணங்களாக இருக்கின்றன என்பதை நாம் சந்தேகத்திற்கு இடமின்றி நம்பலாம்.

அப்பா அவர்கள் சாதனையைப் பற்றி நிறைய எழுதியுள்ளார். திரு. கேரி ஜேக்கப்ஸ் அவர்களும் பிஸினஸ் ஸ்தாபனங்கள் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதெப்படி என்பதைப் பற்றி இரண்டு புத்தகங்கள் எழுதியுள்ளார். (Vital Corporation and Vital Difference). அப்பா அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். அதுபோக விவசாயத்திலும் ஈடுபட்டிருக்கிறார். பிஸினஸும் செய்கிறார். இதுபோக பொருளாதார ரீதியாக இந்தியாவும் மற்றும் உலகமும் எப்படி முன்னேறி வந்துள்ளன என்பதைப் பற்றி நிறைய ஆராய்ச்சி செய்திருக்கிறார். தேசத்தின் பொருளாதார வளர்ச்சி, உலகத்தின் பொருளாதார வளர்ச்சி என்றிவற்றை எப்படி விரைவுப்படுத்தலாம் என்றும் யோசித்திருக்கிறார். இந்த ஆராய்ச்சியின் விளைவாக அவர் என்ன கண்டறிந்திருக்கிறார் என்றால் பொருளாதார முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்குச் சிறந்த சாதனம் power of organisation ஆகும். Power of organisation என்றால் என்ன என்ற கேள்வி உங்கள் மனதில் இப்பொழுது எழலாம். Power of Organisation என்பது systematicஆன மற்றும் முறையான செயல்பாடாகும். நாம் முறையாகவும் systematicஆகவும் செயல்படும் பொழுது நம்முடைய எனர்ஜி மற்றும் கவனம் முழுவதும் நாம் செய்கின்ற வேலைக்கேப் போகிறது. இதன் விளைவாக நம்முடைய எனர்ஜி, நேரம், பணம் மற்றும் நாம் கையாளும் materials என்றிவை நான்கிலும் விரயம் தவிர்க்கப்படுகிறது. இது மட்டுமில்லை organisation என்பது physics விஞ்ஞானத் துறையில் சொல்லப்படுகின்ற lever அதாவது

நெம்புகோல் போல செயல்பட்டு நாம் எடுக்கின்ற முயற்சிக்குண்டான பயனைப் பல மடங்கு பெரிதாக்குகிறது. ஒரு கடப்பாறையை வைத்து நாம் ஒரு பெரிய பாறாங்கல்லை நகர்த்த முயன்றால் அந்தக் கடப்பாறையைச் சப்போர்ட் செய்ய ஒரு ஆதாரம் இல்லாதபொழுது அந்தப் பாறாங்கல்லை நம்மால் சுலபமாக நகர்த்த முடியவில்லை. அதே சமயத்தில் கடப்பாறைக்கு ஆதாரமாக ஒரு சிறு கல்லை வைத்தால்கூட நம்மால் பாறாங்கல்லை எளிதாக நகர்த்த முடியும். சாதாரண கடப்பாறைக்கு ஒரு நல்ல சப்போர்ட் கிடைக்கும் பொழுது அது ஒரு வலிமை வாய்ந்த leverராக மாறுகிறது. அம்மாதிரியே ஒரு சாதாரண வேலையைக்கூட முறைப்படுத்திச் செய்யும் பொழுது அங்கே power of organisation செயல்பட்டு பலனை பல மடங்கு அபிவிருத்திச் செய்கிறது. Leverரினுடைய அபார ஆற்றலைப் பற்றி விவரிக்கும் பொழுது 15ஆம், 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தாலிய விஞ்ஞானி கலிலியோ அவர்கள் தனக்கு ஒரு சரியான சப்போர்ட் கிடைத்தால் நான் ஒரு நெம்புகோலை வைத்து இந்த பூமியைக்கூட தூக்குவேன் என்று அவர் பேசியிருக்கிறார். அதாவது சரியான சப்போர்ட் கிடைத்தால் பூமியைத் தூக்கும் அளவிற்கு leverக்கு power வருமென்றால் முறையான organisationனைப் பயன்படுத்தினால் எவ்வளவு பெரிய காரியத்தையும் நாம் சாதிக்கலாம் என்றாகிறது.

Organisationனுடைய உள் பிரிவுகள் என்ன என்று நீங்கள் கேட்கலாம். Organisationஇல் உள்பிரிவுகள் உண்டு. அவையாவன, எனர்ஜி, direction, force, power, திறமை, பண்பு மற்றும் பலனாகும். நாம் எந்த வேலையைச் செய்ய விரும்பினாலும் முதலில் அந்த வேலையைச் செய்வதற்கு நமக்கு எனர்ஜி வேண்டும். எனர்ஜி இல்லாமல் எந்த வேலையையும் நாம் தொடங்கவும் முடியாது. அது நீடிக்கவும் செய்யாது. ஆனால் நாம் எனர்ஜிக்கு சரியான direction கொடுக்கும் பொழுதுதான் அதனால் ஒரு நல்ல



பலனைக் கொடுக்க முடியும். ஆகவே நமக்கு நோக்கம் ஒன்றிருந்து அந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்துகொள்ளும் திசையில் நாம் நம் எனர்ஜியைச் செலுத்தும் பொழுது அந்த எனர்ஜி வெறும் எனர்ஜியாக இல்லாமல் ஒரு direction உள்ள forceஆக மாறுகிறது. அந்த forceஐ நாம் ஒரு organisation மற்றும் systemத்தின் மூலம் செலுத்தும் பொழுது அது ஒரு productive powerஆக மாறுகிறது. அந்த power skill மற்றும் valueக்களுடன் இணையும் பொழுது இறுதியில் நல்ல பலன் கிடைக்கிறது. நாம் சக்தியை organisation மூலம் வெளிப்படுத்தும் பொழுது பலன் பல மடங்கு பெரிதாகி organisation இல்லாமல் செய்கின்ற வேலைக்குக் கிடைக்கின்ற பலனைவிட குறைந்தது ஆயிரம் மடங்கு அதிகமான பலனைக் கொடுக்கிறது. இந்த எனர்ஜி, direction, force, organisation ஆகியவற்றைப் பள்ளியில் படிக்கும் குழந்தைகளை உதாரணமாக வைத்து நான் சொல்லும் பொழுது, organisationனுடைய பவர் மேலும் தெளிவாகப் புரியும் என்று நம்புகிறேன். இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு உடம்பில் ஏராளமான எனர்ஜி இருக்கிறது. அதை அவர்கள் விளையாட்டில் செலவழித்துவிடுகிறார்கள். அந்த வயதில் குழந்தைகளுக்கு ஒரு நோக்கமோ குறிக்கோளோ இல்லை என்பதால் விளையாட்டில் செலவாகின்ற அவ்வளவு எனர்ஜியும் விரயமாகிவிடுகின்றது. இப்படி விளையாடும் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்து, இங்கே பள்ளியில் நீங்கள் முறையாகப் படிக்க வேண்டும், இது உங்களுக்கு ஒரு வேலை என்று சொல்லி அக்குழந்தைகளுக்கு நாம் ஒரு நோக்கத்தைக் கொடுக்கும் பொழுது அவர்களுடைய எனர்ஜிக்கு இப்பொழுது ஒரு குறிக்கோள் கிடைக்கிறது, ஒரு direction கிடைக்கிறது. இப்படி ஒரு direction கிடைக்கும் பொழுது அவர்களுடைய எனர்ஜி concentrated forceஆக மாறுகிறது. பள்ளிக்கூடம் என்னும் பொழுது அங்கே ஒரு organisation இருக்கிறது, ஆசிரியர்கள் இருக்கிறார்கள், பாட புத்தகங்கள் இருக்கின்றன, time table இருக்கிறது மற்றும் school

time, பரீட்சை, ஹோம் ஒர்க் என்றெல்லாம் இருக்கின்றன. இப்பொழுது forceஆக மாறியுள்ள குழந்தைகளுடைய எனர்ஜி பள்ளியிலுள்ள organisation மூலம் செலுத்தப்படும் பொழுது அந்த எனர்ஜி இப்பொழுது ஒரு productive powerஆக மாறுகிறது. ஆசிரியர்களிடம் teaching ability இருக்கிறது. குழந்தைகளிடம் புரிந்து கொள்ளும் திறனிருக்கிறது. இந்த கற்றுக் கொடுக்கும் திறனும், புரிந்து கொள்ளும் திறனும்தான் skillஆக செயல்படுகின்றன. இந்த இரண்டு skillஉம் குழந்தைகளுடைய எனர்ஜியோடு இணையும் பொழுது அவர்களுக்குக் கல்வியறிவு என்ற பலன் கிடைக்கிறது. இப்பொழுது இப்படி ஒரு பள்ளிக்கூடம் என்ற அமைப்பினுடைய ஆதரவு இல்லாமல் கற்றுக் கொடுக்க ஆசிரியர்களோ, படிக்க பாடப் புத்தகங்களோ, regular class hoursசோ என்று எதுவுமே இல்லாமல் ஒரு குழந்தைத் தானாகவே படித்து கல்வியறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றால் அந்தக் குழந்தைக்கு என்ன கல்வியறிவு கிடைக்கும் என்று நாம் பார்க்க வேண்டும். இப்படி ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுதுதான் பள்ளி என்ற organisation குழந்தைகளின் கல்வியறிவை எந்தளவிற்கு அபிவிருத்தி செய்கிறது என்று நமக்குத் தெரிய வருகிறது.

சிந்தித்துப் பார்த்தால் இந்த organisationஉடைய சக்தியை நாம் நம் வாழ்க்கையில் எல்லா இடங்களிலும் பயன்படுத்தி நாம் விரும்பும் பலன்களை அதிகமாகப் பெற்றுக் கொள்கிறோம் என்று தெரிய வரும். உதாரணமாக, சாலைகளில் traffic signalsகளோ மற்றும் நாற்சந்துகளில் traffic controlலோ இல்லை என்றால் சாலைகளில் போக்குவரத்து என்பது மிகவும் சிக்கலாகிவிடும். நாற்சந்திகளில் இப்பொழுது மூன்று திசைகளில் உள்ள வாகனங்களை நிறுத்திவிட்டு ஒரு திசையிலிருந்துதான் வாகனங்களைச் சாலையைக் கடக்க அனுமதிக்கிறார்கள். இப்படி நிறுத்தி வைக்காமல் நான்கு திசைகளிலிருந்தும் ஒரே சமயத்தில் வாகனங்களைச் சாலையைக் கடக்க அனுமதித்தால் எந்த



வாகனமும் நகர முடியாத அளவிற்குப் போக்குவரத்து ஸ்தம்பித்துவிடும். ஆகவே traffic control என்ற ஒரு system அங்கு இருப்பதால்தான் வாகனப் போக்குவரத்து சீராக சிக்கல் இல்லாமல் இருக்கிறது. எந்தவொரு பிஸினஸ் ஸ்தாபனத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கே உற்பத்திப் பிரிவு, விற்பனைப் பிரிவு, raw material stock பிரிவு, accounts மற்றும் finance பிரிவு, office பிரிவு என்று பல பிரிவுகள் இருக்கும். உற்பத்தி பிரிவிற்கும், விற்பனைப் பிரிவிற்குமிடையே ஒரு co-ordination இல்லாமல் போனாலோ, ஸ்டோர் ரூமிற்கும் உற்பத்திப் பிரிவிற்குமிடையே ஒரு co-ordination இல்லாமல் போனாலோ, விற்பனைப் பிரிவிற்கும், மார்கெட்டிற்கும் இடையே ஒரு co-ordination இல்லாமல் போனாலோ எந்தவொரு வியாபாரமும் இலாபகரமாக நெடுநாள் இயங்க முடியாது. வெகுவிரைவில் வியாபாரம் ஸ்தம்பித்துவிடும். வியாபாரம் என்று மட்டுமில்லை, குடும்ப வாழ்க்கையிலும் நமக்கு organisation உதவுகிறது. Discipline அதாவது கட்டுப்பாடு என்பது அது ஒரு விதமான organisation. கட்டுப்பாடில்லாமல் வாழ்கின்ற குடும்பங்களைவிட கட்டுப்பாடும் குறிக்கோளும் கொண்ட குடும்பங்கள் அதிக முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் காண்கின்றன என்பதை நாம் பார்க்கத்தான் செய்கிறோம்.

*தொடரும்....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நேற்றுப் பிடிக்காதது இன்று புரிந்தால் பிடித்தமாக மாறும். கற்பனை இதமாக இருக்கும். உணர்வு ஏற்கிறது, ஆனால் கற்பனை கசக்கிறது எனில் சூட்சும உணர்வு ஏற்கவில்லை எனப் பொருள்.

*இம்மாதச் செய்தி*

## பூமி சூரியனைச் சுற்றி வருவது கண்ணில் படாது.





**P.131 And all her sweetness into a maimed desire**

**இனிமையெல்லாம் சிதைந்த ஆசையாயின**

- ☆ காலனுக்குச் சேவை செய்யும் கதியே அவள் வாழ்வின் விதி.
- ☆ அவள் நித்தியம் பெற்ற முகத்திரை,
- ☆ கண் மூடியவற்றின் கண் திறக்கும் கடமை,
- ☆ நிலையான மரணத்தின் நிலையற்ற சிறு நிகழ்ச்சி,
- ☆ அழிய வேண்டிய புதிரின் அழிவில்லா ஜீவன்.
- ☆ அதுவே அவள் தீமை புதிரென பெறும் உருவம்.

❋❋❋

## Canto Four

## சிறு வாழ்வின் பெரு இராஜ்ஜியங்கள்

**P.132 A QUIVERING trepidant uncertain world**

**நிலையற்ற லோகம் நடுங்கும் அலை எழுப்பும்**

- ☆ அர்த்தமற்ற சந்திப்பில் எழுந்தது
- ☆ அவள் பாதம் பட்ட வெற்றிடத்து கிரகணம்,
- ☆ சுறுசுறுப்பான இருள், ஆர்வமிகு அசைவு,

☆ அரைகுறையாக விழித்தெழுந்த அவதி

☆ ஜட இருளின் உறக்கத்தினின்று எழுந்தபாடில்லை,

☆ உணர்வால் உந்தப்படும் அஞ்ஞானத்துடனிணைந்தது,

☆ தன்னையறியவும், தன் பிடியில் மற்றதைக் கொள்ளவும்,

☆ ஏழ்மையையும், நஷ்டத்தையும் வாரிசாகப் பெற்றது,

☆ மிரட்டலுக்குப் பயந்து விலகும் நினைவுகளின் தாக்குதல்கள்,

☆ அன்று மறந்த நம்பிக்கையின் மகிமை இன்று பிடித்து உலுக்குகிறது,

☆ தடவும் கைகளின் குருட்டு அசைவு எடுக்கும் முயற்சி,

☆ ஆபத்தும் வேதனையும் அகன்று விரியும் பிளவை நிரப்பும்

☆ வாழ்விழந்த ஆனந்தத்திற்கும் பூமாதேவியின் வேதனைக்குமிடையே

☆ இழந்ததை நாடும் உயர்ந்த வாழ்வு.

☆ புவியை விட்டகன்ற சந்தோஷத்தை நாடித் தேடும்,

☆ திருப்தியும் நிம்மதியுமின்றி வாயிலருகே வந்து நிற்கும்.

☆ திடமான ஜட பூமியில் அமைதி நின்று நிலைபெற

☆ அதன் தேவை பூமியின் பசியுடன் கலந்தது;

☆ ஆசையின் வேகத்தை வாழ்வுக்கு அது சட்டமாக அளித்தது,

☆ ஆத்ம தேவையை ஆழமறியாத கடலாக்கியது,

☆ அழியும் இரவு பகலில் எழுந்த சக்தியொன்று,

☆ காலத்தின் கர்மத்தால் கட்டுண்ட இனத்தின் மீது படிந்த நிழல்,

☆ கலங்கிய நீரோட்டத்தில் எழுந்த குருட்டு இதயத்துடிப்பு.

☆ புலனில் விழித்தெழும் நரம்பின் துடிப்பு



☆ ஜடத்தின் உறக்கத்தை மனத்தின் விழிப்பினின்று பிரித்தது,

☆ எங்கிருந்து வந்தது ஏன் வந்தது என்றறியாத அழைப்பு ஒன்று வந்துளது.

☆ பூமியைக் கடந்த சக்தி வந்து பூமியைத் தீண்டியது;

☆ கிடைத்திருக்கக்கூடிய அமைதி இல்லாமற் போய்விட்டது;

☆ உருவமற்ற ஏக்கத்தின் தீவிரம் மனித இதயத்திற்குரியது,

☆ சந்தோஷம் வேண்டும் என்ற கூக்குரல் வேகமாக எழுந்தது

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

Mother என்ற மந்திரம் ஓம் என்பதைக் கடந்தது.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அறிவு இருப்பதால் மட்டும் உலகம் ஏற்காது;

ஆன்மீகத்தையும் ஏற்காது. பணமிருப்பதால் உலகம் ஏற்கும் எனில் பணத்தை ஏற்கும்;

பணத்திற்காக மனிதனை ஏற்காது.

உலகம் ஒருவரை ஏற்க உலகத்திற்கு அவர் தேவைப்பட வேண்டும்.

உலகம் தேவைக்கு ஏற்கும்;

உயர்வுக்காக ஏற்காது.

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

### XXII. The Problem of Life

Human life has a difficulty. Page No.207
Its whole crux lies here. Para No.3
Man is the mental being.
This is mental consciousness.
It works as a mental force.
It is aware of the universal force.
It is also aware of the life of which it is a part.
But it has no knowledge of its universality.
It does not even know its totality.
It is a totality of its own being.
Therefore it is unable to deal with life in general.

Or with its own life.
In an effective way, it is unable to do so.
A victorious movement of mastery is the effective way.



### 22. வாழ்வின் பிரச்சனை

மனித வாழ்வுக்குச் சிரமம் உண்டு.
அதன் சிகரம் இங்குள்ளது.
மனிதன் மனத்தாலான ஜீவன்.
இது மனத்தின் ஜீவியம்.
இது மனத்தின் சக்தியாகச் செயல்படுகிறது.
இதற்கு பிரபஞ்ச சக்தி தெரியும்.
தான் எந்த வாழ்வின் பகுதியாயுள்ளதோ அதையும் அறியும்.
ஆனால் அதற்குத் தன் பிரபஞ்ச குணம் தெரியாது.
தன் முழுமையையும் அறியாது.
அது தன் ஜீவனின் முழுமை.
அதனால் அதற்கு வாழ்வைப் பொதுவாகச் சந்திக்க முடியவில்லை.
தன் சொந்த வாழ்வையும் சந்திக்க முடியவில்லை.
அதைத் திறம்படச் செய்ய முடியவில்லை.
வெற்றிகரமாக திறம்படச் செய்வது தெளிவான முறை.

Man wants to master the material environment.
Therefore he seeks to know Matter.
He wants to master the vital existence.
Mentality is a great obscure movement.
He wants to master it.
Therefore he wants to know mind.
Man is a jet of light of self-consciousness.
He is not only that.
He is in that like the animal.
He is more a flame of growing knowledge.
Man wants to be master of himself.
Therefore he seeks to know himself.
Similarly he wants to master the world.
He seeks to know the world.
This is the urge of Existence in him.
He is consciousness.
It is the necessity of this consciousness.
He is the Force that is his life.
This Force impels him thus.
Sachchidananda has a secret will.
It appears as the individual.
It is so in this world where he is.
Sachchidananda expresses in his world.
Sachchidananda seems to deny Himself.
This impulsion must be satisfied.
Man must find the condition.
This is the problem man must resolve.



மனிதன் தன் ஜட சூழ்நிலையை ஆள விரும்புகிறான்.
அதற்காக ஜடத்தை அறிய விரும்புகிறான்.
மனிதன் தன் ஜீவனுள்ள சூழ்நிலையை ஆள விரும்புகிறான்.
மனோராஜ்யம் பெரிய இருண்ட ராஜ்யம்.
மனிதன் அதை ஆள விரும்புகிறான்.
அதற்காக மனத்தை அறிய விரும்புகிறான்.
மனோராஜ்யத்தில் மனிதன் தன்னை அறியும் தழல்.
மனிதன் அது மட்டுமல்ல.
இவ்விஷயத்தில் மனிதன் மிருகம் போன்றவன்.
வளரும் ஜுவாலையாயும் மனிதன் இருக்கிறான்.
மனிதன் தன்னை ஆள விரும்புகிறான்.
அதற்காகத் தன்னையறிய முயல்கிறான்.
உலகையாள முனைகிறான்.
அதற்காக உலகையறிய முயல்கிறான்.
சிருஷ்டியின் வாழ்வு மனிதனை இப்படி உந்துகிறது.
மனிதன் ஜீவியம்.
இது ஜீவியத்திற்கு அவசியம்.
அவன் வாழ்வு சக்தியாலானது.
இந்த சக்தி அவனை இப்படி உந்துகிறது.
சச்சிதானந்தத்திற்கு இரகஸ்யமான உறுதியுண்டு.
அது மனிதனாகத் தோன்றுகிறது.
அவன் வாழும் உலகில் அது போலுள்ளது.
மனித வாழ்வில் சச்சிதானந்தம் அப்படி வெளிப்படுகிறது.
சச்சிதானந்தம் தன்னை மறுப்பதாகத் தெரிகிறது.
இந்த உந்துதலைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
அதற்குரிய நிபந்தனையை மனிதன் கண்டு கொள்ள வேண்டும்.
மனிதன் இந்தப் பிரச்சனையை தீர்க்க வேண்டும்.

His own existence compels him.
There is the Deity seated in him.
It also compels him.
The problem must be solved.
His impulse must be satisfied.
Till then the human race cannot rest from its labour.
Man must fulfil himself.
He can do so only by satisfying the Divine in him.

Or he must produce a greater being out of himself.

He will be more capable of doing it himself.
He must become a divine humanity.
Or he must give way to Superman.

Man is the mental consciousness. Page 209
It is not the completely illumined consciousness. Para 4
It is emerging out of Matter.
It is not the term entirely emerged.
Matter is obscure.
It is a great emergence.
Mind is only a progressive term.
Man has appeared in this line.
It is an evolutionary creation.
It cannot stop where he is now.
He must go beyond its present term.
Or he must go beyond himself.



மனித வாழ்வு அவனை இப்படி நிர்ப்பந்திக்கிறது.
அவனுள் தெய்வம் உறைகிறது.
அதுவும் மனிதனை அது போல் நிர்ப்பந்திக்கிறது.
இப்பிரச்சனையைத் தீர்க்க வேண்டும்.
இந்த உந்துதலைத் திருப்தி செய்ய வேண்டும்.
அதுவரை மனித குலம் தன் முயற்சியைக் கைவிட முடியாது.
மனிதன் தன்னைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.
தன்னுள் உள்ள இறைவனைத் திருப்தி செய்து இதைச் சாதிக்க வேண்டும்.
அல்லது தன்னைவிடப் பெரிய ஜீவனை அவன் உற்பத்தி செய்ய வேண்டும்.
அவன் மனிதனைவிட இதைச் சாதிப்பான்.
மனிதன் தெய்வீக மனித குலமாக வேண்டும்.
அல்லது சத்தியஜீவனுக்கு வழிவிட வேண்டும்.

மனிதன் என்பது மனித ஜீவியம்.
இது முழுவதும் தெளிந்த ஜீவியமில்லை.

இது ஜடத்திலிருந்து எழுகிறது.
இது முழுவதும் வெளி வந்த அம்சமில்லை.
ஜடம் இருண்டது.
இது பெரிய பரிணாமம்.
இப்பரிணாமத்தில் மனம் முடிவானதில்லை, ஒரு கட்டமே.
மனிதன் இப்பாதையில் எழுந்தவன்.
இது பரிணாமப் பாதை.
அவனுள்ள இடத்தில் பரிணாமம் நிற்க முடியாது.
இன்றைய கட்டத்தைக் கடந்து அவன் செல்ல வேண்டும்.
அல்லது தன்னைக் கடந்து செல்ல வேண்டும்.

If he himself has not the force to go beyond.
This is the logic.
This is the result.
Mental idea is trying to become a fact of life.
It has to pass through some stages.
It must become the whole Truth.
It is a whole Truth of existence.
It has successive wrappings.
It must deliver itself from them.
It must be fulfilled at two levels.
First it is the light of consciousness.
Again it is in the joy of power.
They are two terms of power and light.
Existence manifests itself through them.
The nature of existence is consciousness and Force.
There is a third term.
These two constituents meet in the third term.

They become one.
They are ultimately fulfilled.
It is Delight.
It is delight of self-existence.
It is satisfied there.
We note it is self-existence.
Our life is one that is evolving.
For it, it is an inevitable culmination.
It is to find the self.
It is necessary.



தன்னைக் கடக்க சக்தியில்லாவிட்டால்,
இதுவே பாதையின் நியாயமான சட்டம்.
இந்த முடிவு தவிர்க்க முடியாதது.
எண்ணம் வாழ்வில் உண்மையாக முயல்கிறது.
அது பல கட்டங்களைத் தாண்டிச் செல்ல வேண்டும்.
அது முழு உண்மையாக வேண்டும்.
அது வாழ்வின் முழு உண்மை.
அதன் மீது படிப்படியான போர்வைகளுண்டு.
அவற்றிலிருந்து எண்ணம் விடுதலை பெற வேண்டும்.
இரு கட்டங்களில் அது பூர்த்தியாக வேண்டும்.
முதலில் அது ஜீவிய ஜோதியில் நடக்கும்.
மீண்டும் அது சக்தியாகும் சந்தோஷத்தில் பூர்த்தியாகும்.
அவை ஜோதி, சக்தியான அம்சங்கள்.
வாழ்வு இவை மூலம் வெளிப்படுகிறது.
ஜீவியமும் சக்தியும் வாழ்வின் சுபாவம்.
மூன்றாம் கட்டம் உண்டு.
இம்மூன்றாம் கட்டத்தில் முதலிரண்டு அம்சங்களும் சந்திக்கின்றன.
சந்தித்தவை ஒன்றாகின்றன.
முடிவாக அவை பூர்த்தியடைகின்றன.
அது ஆனந்தம்.
அது வாழ்வின் - ஆன்மீக வாழ்வின் - சுய ஆனந்தம்.
அது அதில் திருப்தியடைகிறது.
அது சுயமானது, சுய வாழ்வு.
நம் வாழ்வு பரிணாமத்தால் வளர்கிறது.
இதற்கு அது தவிர்க்க முடியாத முடிவு.
அது பிரம்மத்தை அடைய வேண்டும்.
அது அத்தியாவசியமானது.

The self was contained in the seed.
It was a seed of its own birth.
It was a self-finding.
The potentialities were deposited in the movement.
It is the movement of Conscious-Force.
Life took its rise from it.
Human existence contains that potentiality.
It is Sachchidananda realising Himself.
It is realised in certain harmony.
It is a harmony of unification.
It is a unification of the individual life and the life of the universe.
There is the transcendent Something.
It has cast itself into this form of things.
It is a common delight.
It is a common power.
It is a movement of power.
It is a common consciousness.
Mankind expresses these.

*Contd....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஓம் எனில் உலகம் அதிரும்.



பிரம்மம் அதன் வித்தில் உள்ளது.
அவ்வித்து தன் பிறப்பின் வித்து.
அது தன்னைக் காண்பதாகும்.
அதன் திறமையெல்லாம் அச்சலனத்துள் பொதிந்துள்ளது.
அது சித்-சக்தியின் சலனம்.
சித்-சக்தி வாழ்வு பிறந்த இடம்.
மனித வாழ்வு அவ்வித்தைப் பெற்றுள்ளது.
அது சச்சிதானந்தம் தன்னையே சித்திப்பது.
அது ஒரு குறிப்பிட்ட சுமுகத்தில் சித்திக்கிறது.
அச்சுமுகம் ஒரு ஐக்கியத்தைச் சேர்ந்தது.
பிரபஞ்ச வாழ்வும், தனி மனித வாழ்வும் இணையும் ஐக்கியமது.

பிரபஞ்சத்தைக் கடந்ததுண்டு.
அது இந்த ரூபத்தைப் பெற்றுள்ளது.
அது பொதுவான ஆனந்தம்.
அது பொதுவான சக்தி.
அச்சக்தி சலனத்திலிருந்து எழுகிறது.
அது பொதுவான ஜீவியம்.
மனித குலம் இவற்றை வெளிப்படுத்துகிறது.

*தொடரும்......*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

எல்லோரிடமும் இனிமையாக நெருங்கிப் பழகுபவர் மனம் அனைவரையும் வெறுத்து ஒதுக்கும்.

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 52. செயல்படத் தயாராக நிற்கும் பொறுமை ஒன்றை மற்றதாகக் கருதுவது

- செயல்படுத்தத் தயாரான நிலையும், பொறுமையும் உடன் வாரா.
- பொறுமை செயலற்ற நிலை, செயலைக் கைவிட்ட நிலை.
- இரண்டும் சேர்ந்த நிலை அறிவுக்கெட்டாதது, ஆத்மாவுக்குப் புலப்படும்.
- Silent will மௌன சக்தியை உதாரணமாகச் சொல்லலாம்.
- மௌனம் பேச்சுக்கு எதிரிடையானது.
- மௌனம், மௌனமாகப் பேசுகிறது.
- அதன் சாதனை பெரியது.
- நம்பிக்கையும் பகுத்தறிவும் எதிரானவை.
- சக்தியும், அன்பும் எதிரானவை.
- எதிரானவை இணைந்து உடன்பாடாக இருப்பது பூரணயோக நிலை.
- வக்கீல் ஒரு கட்சி பேசுபவர்.
- எதிர்க்கட்சிக்கு எதிரானவர்.
- ஜட்ஜ் இரண்டு கட்சிக்கும் சாதகமானவர்.
- இரண்டு கட்சிக்கும் எதிரானவர்.
- சாதகமாகவும், எதிராகவும் இரண்டு கட்சிகளையும் ஏற்பதால் அவர் இரு வக்கீல்களைவிட உயர்ந்த நிலையில் ஜட்ஜாக இருக்கிறார்.



- **வாழ்க்கையில் ஒத்து வராதது, ஒத்துப்போவது யோகம்.**
- எதிரானவை இணைவதால், அதிக சக்தி எழுகிறது.
- காலம் நகர்ந்தபடியிருக்கும்.
- நகராதது காலமில்லை.
- **நகராத காலம், காலமாகச் செயல்படுவது அற்புதம் நிகழும் நிலை.**
- ஒரு திறன் எந்த நேரமும் செயல்படத் தயாராகப் பின்னணியிலிருப்பது பெரும் திறன்.
- நமக்குள்ள பெருந்திறன்கள் அனைத்தும் அப்படிப்பட்டவை.
- வட இந்தியாவுக்குப் போய் தங்கினால் தமிழ் பேசும் சந்தர்ப்பமில்லை.
- தமிழரைச் சந்தித்தால் உடனே பிரவாகமாகத் தமிழ் வரும்.
- நீச்சலடிக்கத் தெரிந்தால் அத்திறன் பின்னணியிலுள்ளது.
- தண்ணீரில் இறங்கினால் தானே நீச்சல் திறன் வெளிவரும்.
- **ஆன்மா விழிப்பாக இருந்து பின்னணியிலிருப்பது யோகம்.**
- அதே க்ஷணம் முடிக்கும் திறன், யுகாந்த காலப் பொறுமையுடனிருப்பது யோக நிலை என்கிறார் பகவான்.
- செயல்பட அவசரப்பட்டால், திறமை பூரணம் பெறவில்லை என்றாகும்.
- காதலுக்காக காத்திருக்கும் நெஞ்சம் அது போன்ற பொறுமையுடையது.
- தனக்கென்று உரியவர் வரும்வரை அது சலனமின்றி தன் கடமைகளைச் செய்யும்.
- நேரம் வந்தால் எரிமலையாக எதிர்கொள்ளும்.
- 5 ஆண்டில் 6 பேருடன் பழகும் இளைஞர்கள் காதலை நாடுவது இலவு காத்த கிளியாக முடியும்.

- பெரும் இலட்சியங்களை நாடுபவர் ஆயுள் முழுவதும் காத்திருப்பர்.
- கணவன் கைவிட்ட மனைவி 20 ஆண்டு அவன் திரும்பி வரப் பொறுத்திருந்து சாதித்ததுண்டு.
- மனைவியின் அன்புக்காக வாழ்நாள் முழுவதும் தனக்கு ஏமாற்றம் ஏற்பட்டது என அவளறியாமல் பொறுமையாகக் காத்திருந்து நேரம் வந்து புதியன பூத்த பின் மலரும் மனித இதயமும் உண்டு.
- இலட்சம் பிறவி காத்திருக்கக்கூடிய பக்தனுக்கு உடனே மோட்சம் கிடைத்தது.

*தொடரும்.....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உன்னை உன் மனத்தில் அறியலாம்.

உலகத்தில் உன் பிரதிபலிப்பைக் காணலாம்.

உன் செயலால் உன்னை நிர்ணயிக்கலாம்.

உள்ளதை ஏற்று உத்தமனாகலாம்.

உதவியை ஏற்காதவன் பெரியவன்; கொடுக்காதவன் பெரிய ஆத்மா.

உடலும் அசையாமல் உள்ளே வாழ்பவன் உனக்கே உரியவன்.



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## ✡ திருடனுக்கு அனைவரும் ஆதரவு

பிரபலம், உலகம் அறிந்தவர், பேர் பெற்றவர் என்பவை பல தரங்கள்.

பாடகர்கள், பேச்சாளர்கள், அழகாகப் பழகுபவர், பணக்காரர், பெரிய உத்தியோகஸ்தர்கள், பெரிய இடத்துப் பிள்ளைகள், பிரபலமாக இருப்பார்கள்.

அனைவரும் அறிவது என்பது பல இடங்களுக்குப் போவது, பலரிடமும் பழகுவதால் வருவது.

பிரபலம் என்றால் ஊர் ஒருவரை அறிவது. அறியப் பெருமைப்படுவது.

பேர் போனவர் என்பது ஒரு நல்ல விஷயத்திற்காக அனைவரும் ஒருவரை மரியாதையாக நடத்துவது.

பலரும் ஒருவரைத் தெரிந்து கொள்ளப் பிரியப்படுவது பிரபலம்.

பலரையும் ஒருவர் தெரிந்து கொள்வதால் அவர் பிரபலம் ஆகிவிடுகிறார்.

எந்த வகையான பிரபலமும் ஒரே வகையான மக்களிடையே எழும்.

பிரபலமானவர், அவரைப் பிரபலமாக்கும் மக்கள் போலிருப்-பார்.

பொது ஜனம் நினைப்பதற்கு (popular consciousness) மாறான மனநிலை உள்ளவரை ஊர் ஏற்காது. ஏற்க மறுக்கும். அதுவும் மெய், பொய் என்ற பாகுபாடு வந்துவிட்டால் கட்சி பிரிவது தெளிவாக இருக்கும்.

***மெய்யானவரை விட்டு மக்கள் விரைவாக அகல்வர். பொய்யை உலகம் எப்பொழுதும் விரைந்து, விரும்பி ஏற்கும்.***

என்னுடன் வேலை செய்த மிராசுதாரரையும், பேராசிரியரையும் உலகம் வரவேற்கும்.

அவர்கள் மனத்தில் மற்றவரைப் போலிருக்கிறார்கள்.

அவர்கள் மனம் தயாராகப் பொய்யை ஏற்கும்.

முழுவதும் மெய்யானவனை எவரும் அணுகமாட்டார்கள்.

ஆதரவு திருடனுக்கு, அதுவே பொதுமக்கள் அபிப்பிராயம்.

✡ **நல்லபடியாக நடப்பது**

❁ ஒருவரிடம் நல்லபடியாக நடப்பதற்குப் பலனில்லை.

அனைவரிடமும் நல்ல பெயர் எடுப்பதே நல்லவர் என்பதற்கு அடையாளம்.

* நல்லவராக இருப்பது வேறு, நல்ல பெயரெடுப்பது வேறு, நல்ல பெயர் எடுக்க விரும்புவது அகந்தையின் முயற்சி.
* பண்பின் பயிற்சியாக, அனைவரிடமும் நல்ல பெயர் எடுக்குமாறு முயன்றால் வாழ்வே கசப்பாகும். கசப்பு, நம் முயற்சி உண்மை என அறிவிக்கும்.

ஒருவருக்கு இதில் பலன் கிடைத்தால் அது மணலில்



சைக்கிள் விடுவது போல் அங்குலம் அங்குலமாக நகரும். 15 பேர் உள்ள இடத்தில் 14 பேரிடம் பெயரெடுத்தால், 15வது நபர் சூட்சுமமாக உஷாராகி- விடுவார். நாமும் நல்லவர் என்று கூறிவிட்டால், ‘அவர்’ நிலை அளவுகடந்து உயர்ந்துவிடும் என அவருக்குத் தெரியும். *அதை முயன்று பெறுவது பெரிய வெற்றி. உள்ளூர் பஞ்சாயத்தில் மெம்பராவது முதல் 14, கடைசி 15 MLA, MPஆவது போல்.*

* குடும்பத்தில் அபரிமிதமான சுபிட்சம் (abundant prosperity) பெற இது நல்ல முறை.

பிரபலமானவருக்குப் பஞ்சமிருக்காது.

நல்ல பெயரெடுத்தவர்க்கு அதிர்ஷ்டம் வராமலிருக்- காது.

அனைவரிடமும் நல்ல பெயர் எடுத்தபின் பெரிய அதிர்ஷ்டம் ½ நிமிஷம் தயங்காது.

இதுவரை குடும்ப வாழ்வு.

மேற்கொண்ட கட்டங்கள் யோகத்திற்குரியன.

✡ **ஆதாயம் பலனை அனுபவிப்பது**

பாசம் உணர்ச்சியைப் பாராட்டுவது.

*ஆத்மாவைப் போற்றும் வாழ்வு பிரியம் அழகாகும் அன்பு.*

உணர்வின் பிரியம் மனத்தால் அறிவானால் அது ஆத்மாவில் அன்பாகும்.

இறந்த குழந்தையை உயிர்ப்பிக்க புத்தரை வேண்டியவரை எவரும் இறக்காத வீட்டிலிருந்து ஒரு பிடி கடுகு வாங்கி வா என்றார் புத்தர்.

அன்பு கடுகில் பிறந்த மாம்பழம்.

பிறந்தால் க்ஷணம் தரியாது.

மாம்பழம் ஆன்மீக விவேகம் (அன்னை அளித்த பெயர்).

அன்பு ஆத்மா உணரும் ஆனந்தம்.

*ஆத்மாவின் ஆனந்தம் ஆன்மீக விவேகம் பெறுவது அன்பு மலரும் அகிலத்தில் வாழ்க்கை.*

அன்னையை ஆத்மாவில் அறிவது அன்பு அழகொழுக மிளிர்வது.

அன்னையை அறிவது ஆத்மா பெற்ற பாக்கியம்.

அவர் நினைவு இனிப்பது ஆழம் மேலெழும் அவனி கொள்ளா வெள்ளம்.

நினைவு நிலைப்பது சத்தியம் நித்தியமாவது.

ஆழம் அடி மனம்.

ஆன்மா அடி மனக்குகையில் உள்ளது - சைத்தியபுருஷன்.

சைத்தியபுருஷன் உலகை உள்ளங்கையாக்கி உள்ளே புதைப்பது.

✡ **நாம் பெறும் பலன்**

❁ **போன் வேறு யாருக்கும் வரக்கூடாது எனில் நமக்கு-மில்லாமல் போகும்**

- ❋ அனைவரும் செய்யும் வேலையில் அனைவரையும் விலக்கும் மனப்பான்மை நம் வேலையைக் கெடுக்கும்.
- ❋ அனைவர் வேலையும் நம் வேலை.
- ❋ அனைவரும் சேர்ந்து செய்யாமல் நம் வேலை நடக்காது.



❋ அன்னை ஜீவியம் பிரபஞ்ச ஜீவியம்.

தனியாக நடப்பதில்லை.

சொந்த வேலை தனியாக நடக்கும்.

அன்னை (Mother) கொடுப்பது தனியாக வாராது. அனைவருக்கும் வரும்.

அனைவரும் பெற வேண்டும் என்ற எண்ணம், அன்னையை உடனே அழைத்து வரும்.

நாம் ஒரு புஸ்தகம் வாங்கிப் படிக்கலாம்.

பலரும் வாங்காவிட்டால் புத்தகம் வெளியிட முடியாது.

❋ வாழ்வில் அதிர்ஷ்டம் ஒருவருக்குரியது.

அன்னை அதிர்ஷ்டம் என்பது அனைவருக்கும் உரியது.

பரநலம் - அனைவரையும் நினைக்கும் மனம், பரந்த மனம் - அன்னை அதிர்ஷ்டத்தைத் தயாராக ஏற்கும்.

அதிர்ஷ்டம், பேரதிர்ஷ்டம், அன்னை அதிர்ஷ்டம், அருள், பேரருள், அதையும் கடந்த நிலை - அருளே வாழ்வாக அமைந்த உலகம்.

"நீ சொல்லி நான் எப்படிச் செய்வது?" - முதலாளி.

"நான் சொல்லி எப்படி உலகம் ஏற்கும்?" என அன்பர் நினைக்கிறார்.

அவர் பகவான் சொல்லின் பவித்திரத்தை அறியாதவர்.

தன் பர்சனாலிட்டிக்குப் பவர் உண்டு என நினைக்கிறார்.

தான் சிறிய மனிதனாக இருப்பதால் உலகம் ஏற்காது என நினைக்கிறார்.

தன்னை மறந்து சொல்லுக்குப் பவர் (power) உண்டு என

நினைப்பது உண்மை (sincerity).

தோப்பு மேனேஜர் அதைச் செய்தார்.

நம்மால் முடியுமா என நினைக்காமல், இந்தச் சொல் சக்தி வாய்ந்தது என நினைப்பது (faith, sincerity), நம்பிக்கை, உண்மை.

*அது மனமாற்றம், மனம் நம்மிடமிருந்து பகவானுக்கு மாறுவது.*

*அந்த மாற்றம் ஏற்படும் நேரம் (Hour of God. We can say it is your own Hour).* இறைவன் வரும் தருணம். இறைவன் அன்பரை நோக்கி வரும் தருணம் எனலாம்.

நம்பிக்கை எழுவது நானிலம் மலர்வது.

நம்பிக்கை உள்ளே பூத்தால் நலம் நிலையாக நிலைக்கும்.

கணவன் மனைவியை நம்புவதும், மனைவி கணவனை நம்புவதும் தெய்வ நம்பிக்கைக்குச் சமம்.

நம்பிக்கை நம்புபவரை தெய்வமாக்கும்.

ஒருவர் நம்பிக்கையால் அடுத்தவர் தெய்வமாவார்.

*தொடரும்....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

வாழ்வில் எல்லாம் இருப்பவனுக்கும் எதுவுமே முடியாத நேரம் உண்டு. அன்னையில் எதுவுமே இல்லாதவனுக்கும் எல்லாம் முடியும் நேரம் உண்டு.



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

236. *பூ மலர்ந்து கெட்டது, வாய் விரிந்து கெட்டது.*

**மலர்ந்த மலர் மணம் வீசி நிறைந்தது.**

237. *எரிகிற வீட்டிலே பிடுங்கியது லாபம்.*

**எரிகிற வீடு தரித்திரத்தை எரிக்கும்.**

238. *சாதுரியப் பூனை மீன் இருக்க, புளிமாங்காய்த் திங்கிறதாம்.*

**புளி மாங்காயும் மீனாகும் சாதுரியம்.**

239. *வெறும் வாய் மெல்லுகிற அம்மையாருக்கு, அவல் அகப்பட்டதுப் போல.*

**வாய் மெல்லும் அவல், மெல்லும் வாயையும் கேட்கும் காதையும் மணக்கச் செய்யும்.**

240. *பந்தியில் வேண்டாம் வேண்டாம் என்றாலும் இலை பொத்தல் இலை பொத்தல் என்கிறான்.*

**இலையில் கண்ட பொத்தல், பொத்தல் இலையே இல்லையெனச் செய்யும்.**

*தொடரும்....*

❋❋❋

# ஆன்மீக மற்றும் மனோதத்துவ ரீதியான கருத்துகளுக்கு உண்டான வரையறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

N. அசோகன்

61. மனிதன்: பரிணாம வளர்ச்சியைப் பெற விரும்புகின்ற ஒரு ஆன்மா அறிவுமயமாகவும், உணர்வுமயமாகவும் ஆகியுள்ள உடம்பில் பிறவி எடுக்கும் பொழுது அந்த ஆன்மாதான் மனிதன் என்றழைக்கப்படுகிறது.

62. சத்தியஜீவிய மனிதன்: சத்தியஜீவியத்தினுடைய சக்தியை மனிதனுடைய ஆன்மா வாங்கி திடவடிவம் பெறும் பொழுது அது சத்தியஜீவிய மனிதனாக உருவம் எடுக்கிறது. அப்படி பிறக்கின்ற சத்தியஜீவிய மனிதனிடத்தில் அறிவும், உறுதியும் ஒன்றாக இணைந்து செயல்படுகின்றன. மேலும் சத்தியஜீவிய மனிதன் படைப்பின் ஒற்றுமையை உணர்ந்தே எப்பொழுதும் செயல்படுவான்.

63. குருநாதர்: ஆன்மீக அறிவும், அனுபவமும் நிரம்பிய ஒருவர், அந்த அறிவும், அனுபவமும் இல்லாத மற்றவர்களுக்கு ஆன்மீகப் பாதையில் வழிகாட்டும் பொழுது அவர் குருநாதர் என்றழைக்கப்படுகிறார்.

64. வலி: வெளிவுலகத்திலிருந்து வருகின்ற ஒரு தாக்கத்தை உடம்பால் தாங்க முடியாத பொழுது அது வலியாகத் தெரிகிறது.



65. அழகு: இறை ஆனந்தத்தை நம்முடைய அறிவு அழகாகப் பார்க்கிறது.

*தொடரும்.....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இடைவிடாது அன்னையை நினைப்பதும், இடைவிடாது அன்பு செலுத்துவதும், இடைவிடாது அன்பைப் பெறுவதும், இடைவிடாது வேலை செய்வதும் ஒன்றே.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதன் அனுபவிப்பது வாழ்வு.

இறைவன் ஆனந்தப்படுவது லீலை.

போராடுவது மனிதனுக்குரியது.

ஆனந்தம் ஆண்டவனுக்குரியது.

போராடிப் பெறுவது மனித இன்பம்.

போராட்டத்தை அனுபவிப்பது லீலையின் ஆனந்தம்.

பயந்து சாவது மனிதனின் இன்பம்.

மீண்டு எழுவது பிரம்மானந்தம்.

# சரண்டர் சத்யன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

அவள் ஆர்வத்துடன் எதிர்பார்த்த லூயி வந்துவிட்டாள்.

தெரசா, லூயியின் கையைப் பிடித்துக் கொண்டு, தான் நேற்றிரவு கண்ட கனவை உணர்வுபூர்வமாய்ச் சொல்லச் சொல்ல லூயி கண்களை மூடியவண்ணம் மனத்திரையில் அவற்றைப் பார்க்கலானாள். தெரசாவிற்குத் தன்னைப் புரிந்துகொண்ட லூயியின் இயல்பு ஆறுதலளித்தது.

‘‘லூயி, இதை வெறும் கனவு என்று என்னால் ஒதுக்க முடியவில்லை. ஆனால் என் கணவருக்கு இதிலெல்லாம் நம்பிக்கையில்லை. இந்தக் கனவை எப்படிப் புரிந்துகொள்வது? அன்னைக்குத் தன்னைச் சரணம் செய்துள்ள அன்பரை எப்படிக் கண்டுபிடிப்பது? இங்கு அன்னையைத் தேடி வரும் அன்பர்கள் யாவருமே பக்திபூர்வமாய்த் தெரிகிறார்கள்" என்றாள் தெரசா.

‘‘அக்கா, உன் கனவு அர்த்தமற்றதன்று. இதில் ஏதோ சூட்சுமம் இருப்பதை என்னால் உணர முடிகிறது. அன்னை, அன்பர்களின் கனவில் வருவதும் உண்டு என்று படித்திருக்கிறேன். இதைப் புறக்கணிப்பதற்கில்லை என்றே நினைக்கிறேன். எனக்கொரு நம்பிக்கையிருக்கிறது. இங்கு ஒரு அன்பரைப் பற்றி காலையில் அறிய நேர்ந்தது. அவர் இருப்பிடத்தைச் சரியாக தெரிந்து வருகிறேன். புறப்படத் தயாராயிரு" என்று கூறி சரண்டர் என்பவரின் இருப்பிடம் கேட்டாள்.

பாண்டிச்சேரிக்கு சற்று அருகில் உள்ள பிரசித்தமில்லாத ஒரு கிராமத்தின் பெயரைக் கூறி, அவர் ஊர்ப் பெயர் மட்டுமே தங்களுக்குத் தெரியும் என்றும், அவர் இருப்பிடம் சரியாகத் தெரியாது என்றனர்.

பரவாயில்லை. கிராமத்தின் பெயர் தெரிந்துவிட்டது. சிற்றூர்தானே, அவர் பெயரை வைத்துக் கண்டுபிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையிருந்தது.

தெரசாவின் கணவர் திரும்பியிருந்தார். டாக்ஸி வைத்துக் கொண்டு போகலாம் என்று முடிவாயிற்று.

தெரசாவின் கணவருக்குத் தன் மனைவியுடன், லூயியும் சேர்ந்து இதையெல்லாம் நம்புவது வேடிக்கையாயிருந்தது.

“லூயி, நீகூடவா இதையெல்லாம் நம்புகிறாய்? ஏதோ பாண்டி வர விரும்பினீர்கள், வந்தோம். இப்பொழுது என்ன ஆகிவிட்டது? பிரபல மருத்துவர்கள் குணப்படுத்த முடியவில்லை என்றதை இந்த மனிதர் குணப்படுத்துவது எப்படிச் சாத்தியம்?" என்றார்.

“நீங்கள் ஸ்ரீ அரவிந்தரின் மகத்தான இரண்டு நூல்களைப் படிக்க வேண்டும். அவர் எத்தனை அற்புதமாகப் பெரிய விஷயங்களை நயமாகக் கூறியுள்ளார் என்று எனக்கு இன்னும் வியப்புத் தீரவில்லை. அந்த மகாயோகியார் இவரை மகாசக்தி என அடையாளங் காட்டியுள்ளார். நம் பாரிசில் அவதரித்தவர் அன்னை என்பதே என்னை மெய்ம்மறக்கச் செய்கிறது. மூடநம்பிக்கைகளையும், போலித்தனத்தையும் புறக்கணித்தவர் அன்னை என்பதைப் படித்திருக்கிறேன். ஆன்மாவினுடன் தொடர்பு கொள்ள முடிந்தால் எதுவும் சாத்தியம் என்றும் படித்திருக்கிறேன். அன்னை கூறும் சைத்தியக் கல்வியின் சட்டங்களில் ‘அறிவை நம்பாதே, ஆன்மாவை நம்பு' என்பதும் ஒன்று" என்று கூறினாள் லூயி.

‘‘தெரசாவின் நம்பிக்கையை மூடநம்பிக்கை இல்லை என்கிறாயா?" என்று மேலும் கேலியாகக் கேட்டார்.

“நீங்கள் சொல்வதுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. பரமஹம்சர் சொல்லுவாராம், குருட்டு நம்பிக்கை என்றால்

கண்ணுள்ள நம்பிக்கை என்று ஒன்றிருக்கிறதா என்ன என்று. அது போலவே நீங்கள் மூடநம்பிக்கை என்கிறீர்கள். அறிவுக்குப் புலப்படாததை ஆன்மா அறிவில் பிரதிபலிப்பதுதான் நம்பிக்கை என்று ஸ்ரீ அரவிந்தர் கூறியிருக்கிறார். இறைசக்தியைப் பற்றி எழும் நம்பிக்கையை விலைமதிப்பற்றதாக உணர்ந்து இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று ஸ்ரீ அன்னை கூறியுள்ளதைப் படித்திருக்கிறேன்'' என்று மேலும் லூயி தன் நம்பிக்கையை, ஆன்மாவைப் பற்றிய நம்பிக்கையை வலியுறுத்தினாள்.

“என் நம்பிக்கையை விடு. தெரசாவின் நம்பிக்கை பலித்தால் சரிதான்'' என்று ஒரு படி இறங்கிவந்தார் தெரசாவின் கணவர்.

மூவரும் காரில் புறப்பட்டு மேற்படி கிராமத்தை எட்டினர். மொழிப் பிரச்சனை காரணமாய் அவர்கள் தேடி வந்தவர் வீட்டை எளிதில் கண்டுபிடிக்க இயலவில்லை. கிராமமானதால் எதிர்ப்பட்டவர் பெரும்பாலும் அதிக படிப்பில்லாதவராய் இருந்தனர். ஆங்கிலத்தில் பேசி அவர்களைப் புரிய வைக்க இயலவில்லை.

இறுதியில் லூயிதான் ஒரு வழியைக் கண்டுபிடித்தாள். ஸ்ரீ அன்னையின் திருவுருவப் படம் ஒன்றை ஒருவரிடம் காண்பித்து இவர் இருக்குமிடம் எது என்று ஜாடையில் கேட்டாள்.

அவரோ அவர்கள் அன்னையைப் பற்றிக் கேட்பதாக எண்ணி பாண்டிச்சேரியில் இருக்கிறது என்றார். மேலும் அவருக்கு எப்படிப் புரிய வைப்பது என்று சிந்தித்து நின்றபோது அங்கு வந்த மற்றொருவர் அவ்வூரிலுள்ள சத்யன் என்ற அன்னை அன்பரைச் சந்தித்தால் அன்னையைப் பற்றி அறியலாம் எனவும், அவர் வீட்டைத் தான் அடையாளம் காட்டுவதாகவும் அவர்களுக்கு எப்படியோ வார்த்தையாலும், செய்கையிலும் கூறி, உடன் அழைத்துப் போனார்.

இவர்கள் சத்யன் வீட்டிற்கு வருவதற்கு முன் சத்யனைப் பற்றிச் சில செய்திகள் நாம் தெரிந்து கொள்வது நல்லது. சத்யனின் தந்தை அன்னையின் தோட்டத்தில் வேலை செய்தவர். ஒரு நாள்



சத்யன் தன் தந்தையுடன் அன்னையைப் பார்க்கச் சென்றார். சிறுவர்களிடம் அதிக உரிமையுடன் பழகும் அன்னையின் இயல்பால் இவனை அருகே அழைத்து அன்புடன் ஒரு சாக்லேட் கொடுத்தார். மிகுந்த மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றுக்கொண்ட இவன், ''எனக்கு மிகவும் பிடித்ததை நீங்கள் கொடுத்தீர்கள். உங்களுக்கு எது பிடிக்கும் என்று சொன்னால் நானும் அதை உங்களுக்குத் தருவேன்” என்று கள்ளமில்லாமல் கூறினான்.

“எனக்கு ரோஜாப்பூ மிகவும் பிடிக்கும்” என்றார் அன்னை.

“ஏன் அம்மலரைப் பிடிக்கும்?” என்றான் மேலும்.

“அதுதான் தன்னை இறைவனுக்குப் பூரணமாய் தந்துவிடத் தயங்குவதில்லை. அதற்கு நான் சரணாகதி எனப் பெயரிட்டுள்ளேன்” என்றார்.

“சரணாகதி என்றால் என்ன?” என்றான் சிறுவன்.

“தயக்கமில்லாமல் இறைவனுக்குத் தன்னைத் தந்துவிடுவது” என்றார் அன்னை.

“எனக்கு இறைவனைத் தெரியாது. உங்களை எனக்கு மிகவும் பிடிக்கிறது. நான் என்னை உங்களுக்கே சரணாகதி செய்து கொள்ளவா?” என்றான் சிறுவன்.

சலனமில்லாத இளம்பருவமானதால் சந்தேகமின்றி அவர் கூறியதை அவனால் ஏற்க முடிந்தது.

“எனக்கு உன்னைச் சரணாகதி செய்து கொள்வதென்றால் எனக்குப் பிடித்ததைச் செய்வாயா?” என்றார்.

“சொல்லுங்கள். நிச்சயம் செய்வேன்” என்றான் உறுதியாக.

''எனக்குப் பொய் பிடிக்காது. கோபம் பிடிக்காது. போட்டியிடுவது பிடிக்காது. சோம்பேறித்தனம் பிடிக்காது. ஆர்ப்பாட்டம் பிடிக்காது. அன்பும், பொறுமையும், நேர்மையும்தான் எனக்குப் பிடிக்கும்” என்றார்.

அந்தச் சிறு பருவத்தில் அன்னையின் அருள்வாக்கு அவன்

இதயத்தில் நன்றாகப் பதிந்துவிட்டது.

அவர்மீது கொண்ட அன்பின் அடையாளமாக ரோஜாத் தோட்டங்களுக்கு நேரே சென்று தன்னால் இயன்ற பூக்களைச் சேகரித்து வருவான். அன்னை அவற்றை அன்புடன் பெற்று அவனை ஆசீர்வதிப்பார்.

நாளடைவில் சிறுகச் சிறுக உழைத்து சம்பாதித்து சொந்தத் தோட்டம் வைத்து மலர் பயிராக்கினான். அன்னையின் அறிவுரைப்படியே மலர் வியாபாரம் செய்தான். வியாபாரத்தில் கொள்ளை லாபம் பெற ஆசைப்படமாட்டான். அன்னை தமக்குப் பிடிக்காது என்பவற்றையெல்லாம் தன் வாழ்விலிருந்து விரட்டினான். அவர் தம்முடன் சாந்நித்யமாய் இருப்பதாகப் பூரணமாய் நம்பினான். தன் தந்தையார் இறந்தபோது ஊரையே புறக்கணித்து அவர் சடலத்தை எரிக்காமல் புதைத்தான். யாருக்கும் அஞ்சாமல் உண்மை பேசுவான். சோம்பியிருக்கமாட்டான். தன் சிறு பருவத்தில் ஒரு முறை, ''அன்னையே, நீர் எப்பொழுது என் வீட்டிற்கு வரப்போகிறீர்?'' என்று ஆர்வமாய்க் கேட்டதற்கு, அன்னை அவனிடம், "உன் பக்தியும் நம்பிக்கையும் நாளுக்கு நாள் வளரும். என் வரவிற்காக நீ உன் வீட்டை நாள்தோறும் சுத்தமாக வைத்துக் கொள்வாய். திடீரென ஒரு நாள் நான் உன் வீட்டில் வெளிப்பட வேண்டியதிருக்கிறது. அப்போது வருவேன்" என்று கூறினார்.

அதைச் சத்தியவாக்காய் ஏற்று தன் சிறிய வீட்டைச் செம்மைபடுத்தினான். வீட்டைச் சுற்றி அழகிய தோட்டம் அமைத்தான். ஆடம்பரம், ஆரவாரம் ஏதுமின்றி குறைந்த பொருட்களைக் கொண்டு வாழப் பழகினான். தன் வீட்டைப் பளிங்கு போல் பாதுகாப்பான். பொருட்களை ஜீவனுள்ளதாய் மதித்து நடப்பான். அவனைச் சிலர் பரிகசித்தனர். சிலர் வியந்தனர். சிலர் பாராட்டினர். அவன் எதனாலும் பாதிக்கப்படாதிருந்தான். அன்னை சமாதியாகுமுன் கொடுத்த திருவுருவப் படம் ஒன்று வைத்திருந்தான். அதுவே அவன் சொத்து. அதை அவன் சிரத்தையுடன்



வைத்திருந்தான். வளர வளர அன்னையின் கோட்பாடுகளை தெரிந்து கொண்டான். சடங்கு, சம்பிரதாயங்கள் அன்னைக்கு விலக்கு என்பதால் ஊர்க் கட்டுப்பாட்டிற்கு அஞ்சாது, அவற்றைப் புறக்கணித்தான். இதனால் ஊர்ப் பெரியவர்களுடன் அவனுக்கு மாறுபட வேண்டிய நிலை வந்தது. அதற்கு அவன் கவலைப்படவில்லை. அன்னையிடம் தான் கொண்டுள்ள அன்பு உண்மையானது. அவருக்குத் தன்னால் துரோகம் செய்ய முடியாது என்று கூறிவிட்டான். ஊர்ப் பெரியவர் இவனைச் சபித்தார். பரம்பரையாய் செய்துவரும் சடங்குகளை மறுப்பதால் அவன் கேடுறுவான் என்றார். அவன் அவரை அலட்சியம் ஏதும் செய்யவில்லை. அதேநேரம் அவர் சாபங்களைப் பொருட்படுத்தவுமில்லை.

அதற்கு மறுநாள் அவர் தன் தென்னந்தோப்பிற்குச் சென்றபோது கனத்த தேங்காய் ஒன்று அவர் தலை மீது விழுந்து அவர் உயிர் பிழைப்பது பெரும்பாடாயிற்று. அதிலிருந்து சத்யனின் செயலில் யாரும் குறுக்கிடுவதில்லை. எவரும் குறை கூறும்வண்ணம் அவன் தவறாக நடப்பதும் இல்லை.

இப்படிப்பட்ட அன்னை அன்பனான சத்யனின் வீட்டிற்கு முன் அவ்வூரார் ஒருவரால் வழிகாட்டப்பட்டு தெரசா, அவள் கணவர், அவர்கள் மகள் மோனா, லூயி நால்வரும் காரில் வந்திறங்கினர்.

நந்தவனம் போன்ற அழகிய மலர்த்தோட்டத்தின் நடுவே, சிறிய, அழகிய அந்த வீடு தெய்வீகமாய்த் தோன்றியது. மலர்களின் மணம் மனத்திற்கு இதமளித்தது. அமைதியோ சொல்லற்கரியது.

வழிகாட்ட உடன் வந்தவர் படல் போன்ற கதவை மெல்லத் திறந்து ஒற்றையடிப் பாதையாய் அமைந்த சிமெண்ட் பாதையில் நடந்து சென்று வீட்டின் முன் நின்று உள்ளே பார்த்தார். கிராமத்தார் சப்தமிட்டுப் பேசும் வழக்கத்திற்கு மாறாக மெல்லிய குரலில் "ஐயா" என்றழைத்தார்.

எளிய, தூய உடையணிந்த மலர்ச்சியான முகமுடைய ஒருவர் வெளிப்பட்டார். ஐம்பதைக் கடந்தவர்தாம். வயோதிகம் தெரியாத அளவு புத்துணர்ச்சியுடனிருந்தார்.

வழிகாட்ட வந்தவர், தணிந்த குரலில் வெளியே காரில் வந்திருப்பவர்கள் அன்னையை பற்றி ஏதோ கேட்பதாய்க் கூறி, அவர்களைக் காண்பித்தார்.

வெளியே நிற்பவர்கள் வெளிநாட்டினர் என்பது அவர்கள் தோற்றத்திலும் ஆடையிலும் தெரிந்தது.

அன்னையைப் பற்றிக் கேட்க வந்தவர்கள் என்றவுடன், ஆர்வத்துடன் வெளியே வந்து அன்பு பொங்க கைகூப்பி வரவேற்றார். உள்ளே அழைத்து உட்கார நாற்காலி போட்டார். உள்ளூர் போஸ்ட் ஆபீஸில் தனக்கு நட்பான இளைஞர் ஒருவர் படித்தவர் இருப்பதால் அவரை அழைத்து வரச் செய்தார்.

வீட்டிற்குள் வருமுன் பெண்கள் காரிலிருந்து மடக்கிய வீல்சேர் ஒன்றைப் பிரித்து, அதில் 6, 7 வயது மதிக்கத்தக்கக் குழந்தை ஒன்றை உட்கார வைத்து வீட்டு முகப்பு வரை தள்ளிக் கொண்டு வந்து, வீட்டிற்குள் நுழையும்போது குழந்தையை தூக்கிக் கொண்டு வந்ததைச் சத்யன் கவனித்தார். அதை மெல்ல கீழே துணியைப் பரப்பி அதில் படுக்க வைத்தனர். அக்குழந்தையின் முகத்தில் சலனம், உணர்ச்சி ஏதுமில்லை. நடக்க முடியாத குழந்தை போலும் என்றெண்ணி அதன் காலைக் கவனித்தபோது காலில் குறையொன்றும் தெரியவில்லை. குழந்தைக்கு நலமில்லைபோலும் என்று மட்டும் புரிந்துகொண்டார்.

அதற்குள் போஸ்ட் ஆபீஸ் நண்பர் பாலன் வந்துவிடவே, அவரிடம் இவர்களைப் பற்றி விசாரிக்கும்படி சத்யன் கேட்டுக் கொண்டார்.

இனிய ஆங்கிலத்தில் பாலன் அவர்களுடன் உரையாடத் தொடங்கியதும் அவர்கள் தாங்கள் பாரிஸைச் சேர்ந்தவர்கள் என்று கூறினார்கள்.



பாரிஸ் என்ற சொல்லைக் கேட்டவுடன் சத்யன் பரவசமானார்.

"எங்கள் அம்மாவின் ஊரிலிருந்தா வந்திருக்கிறார்கள்?" என்று சொல்லும்போது அவர் நா இனித்தது.

அவரின் ஒரே சொந்தம், ஒரே சொத்து ஸ்ரீ அன்னை. அன்னை தொடர்பான யாவுமே அவரைப் பரவசப்படுத்தும்.

அவர்களுக்குப் பருக இளநீர் கொண்டு வரச் சொன்னார். அவர்கள் மறுக்கவே, தாமே அவர்களுக்கு டீ தயாரித்துக் கொடுத்தார்.

அவர்கள் தங்கள் மகள் பிறந்ததிலிருந்து மனவளர்ச்சி இல்லாதிருப்பதையும், உணர்வற்ற நிலையில் இருப்பதையும், பல மருத்துவர்களும் தோற்றுப்போனபின் அன்னையின் அருளை நாடி இந்தியா வந்திருப்பதையும் தெரிந்துகொண்டார்.

அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்தக் குழந்தையை மெல்ல எடுத்துத் தோள் மீது போட்டுக்கொண்டார். முதுகை மெல்ல வருடிக் கொடுத்தார். தாம் முதன்முதலில் சிறுவனாய் இருந்தபோது அன்னையைத் தரிசித்த காட்சியை நினைவுகூர்ந்தார். முகமெல்லாம் சிரிப்பாக குனிந்து அவர் தமக்களித்த சாக்லேட்டை தான் ஆவலோடு வாங்கிக் கொண்டபோது தன் முதுகில் தட்டிக் கொடுத்ததை இப்போது நடப்பது போல் உணர்ந்தார். அவர் கண்கள் ஆனந்தக்கண்ணீர் வடித்த காட்சியைச் சுற்றியிருந்தவர் கண்டனர்.

அருகிலிருந்த உள்ளூர் நண்பரிடம், நாட்டுவைத்தியர் ஒருவரை அழைத்து வரச்செய்தார். அக்குழந்தையின் உடல்நிலை பற்றிக் கூறி, "ஏதேனும் மருந்து உண்டா?" என்றார்.

நாட்டுவைத்தியர் தம்மிடம் ஒரு மூலிகைத் தைலம் இருப்பதாயும், அது மிகுந்த சக்தியுள்ளது என்றாலும் அது எல்லோர்க்கும் பலிப்பதில்லை என்றும், ஒருவேளை சத்யனின் அன்னை பக்திக்கு அது பலித்தால் உண்டு என்றும் கூறினார்.

அருளை ஏற்பதில் இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று ஆதாயத்திற்காக ஏற்பது. இது அவ்வளவு சிறந்ததில்லை. மற்றொன்று ஆன்மீக வரமாக அதனை ஏற்பது. இது உயர்ந்தது. சத்யன் அன்னையின் அருளை ஆன்மீக வரமாகப் பெற்றிருந்ததால் அவர் அத்தைலத்தைக் குழந்தைக்குத் தம் கையால் தடவினார். “அம்மா இத்தைலத்தின் மூலம் நான் உம் அருளையே தடவுகிறேன்” என்று எண்ணிக்கொண்டார்.

குழந்தையின் முகத்தில் உணர்ச்சி ரேகைகள் கோடிட்டன. கை, கால்களை மெல்ல அசைத்தது. அப்போது தெரசாவின் மனநிலையை வருணிக்க எந்த மொழியிலும் சொற்கள் இல்லை.

அவள் சத்யனின் காலில் விழுந்து வணங்கி, தன் மகளைப் பெற்றுக்கொண்டாள். தெரசாவின் கணவர் வாழ்க்கையில் முதல்முறையாக ஆன்மீக சக்தி என லூயி கூறியதைப் பற்றி எண்ணலானார்.

அதன் பிறகு தெரசா தான் கண்ட கனவைச் சத்யனுக்குக் கூறும்படி பாலனிடம் விவரித்தாள். அதைக் கேட்ட சத்யன் மிகுந்த பரவசத்துடன் உள்ளே சென்று, முதன்முதலில் அன்னை தமக்களித்த அவர் திருவுருவப் படத்தை எடுத்துக் கண்ணீர் பெருக தரிசித்தார். “அம்மா நீர் வருவதாகச் சொன்ன நாள் இன்றுதான் என்று கண்டுகொண்டேனம்மா. உம் சாந்நித்யம் வெளிப்பட்ட நாள் இன்று. என் தவம் பலித்த நாள் இது” என்று பரவசப்பட்டார்.

இனி பத்திரிகையாளர்களும், TV நிகழ்ச்சி தயாரிப்பாளரும் அங்குக் கூடியதையும், மறுநாள் வெளிவந்த செய்திகளையும் வாசகர்களின் கற்பனைக்கே விட்டுவிட்டேன்.

*முற்றும்.*

❋❋❋



(*‘அன்னையின் தரிசனம்’* என்ற நூலிலிருந்து)

# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

## 4. முறையான செலவு

பொருள்களைத் தூய்மையாகவும், சீராகவும் வைக்க வேண்டியது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் பொருள்களை விரயம் செய்யாமல் இருத்தலும் ஆகும்.

உண்ணும்பொழுது தேவையான அளவு உணவைப் பெற்று, மிச்சம் வைக்காமல் உண்ண வேண்டும். உண்டியைத் தயாரிக்கும்பொழுது தேவையான அளவைக் கணக்கிட்டு ஆக்க வேண்டும். எதிர்பாராதவிதமாக உணவு மீதியாகிவிட்டால், அதை வீணாக்காமல் பசித்து வரும் எளியவர்க்குப் படைத்துவிட வேண்டும். பால், தயிர், எண்ணெய் போன்றவற்றைக் கவனக் குறைவால் கீழே கொட்டிவிடக்கூடாது. அதன் காரணமாக அவை கெட்டுவிடுவதால் உபயோகப்படுத்த முடியாமல் போய்விடுகிறது. அதனைத் தவிர்க்க வேண்டும்.

அரிசி, பருப்பு, மாவு முதலான பொருள்களையும் கவனமாக வைத்துக் கொள்ள வேண்டும். வண்டு பிடித்தல், காளான் ஏறுதல் போன்றவற்றால் உணவுப் பொருள்கள் பாழாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எரிபொருள்கள் எதுவானாலும் அவற்றைத் தேவையானபோது, தேவையான அளவில் உபயோகிக்க வேண்டும். குழந்தைகளுக்கு உணவு பரிமாறும்போது அளவோடு உண்ணவும், உணவை வீணாக்காமல் இருக்கவும் அவர்களைப் பழக்கப்படுத்த வேண்டும்.

வயது வந்தவர்களுக்குக்கூட உண்ணும் அளவு முக்கியம். உயிர் வாழ்தலுக்குத் தேவையான ஆரோக்கியத்துக்கும், செய்கின்ற வேலைக்கும் போதுமான அளவுக்கு மேல், ருசி காரணமாக அதிகம் உண்பது தவறாகும். உடுக்கும் உடைகள் விஷயத்திலும் முறையான செலவு முக்கியம். ஓரிரு தடவை உடுத்தியபின் உடைகளைத் தூக்கி எறிந்துவிட்டு, புதுப் புது உடைகளை வாங்குவது தவறு. அது தவிர்க்கப்பட வேண்டும். எந்தப் பொருளை வாங்கினாலும், அது உண்மையான தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இருக்க வேண்டும். கௌரவத்தையும், 'பிறர் பெருமையாக நினைக்க வேண்டும்' என்பதற்காகவும் பொருளை வாங்கவோ அல்லது வைத்திருக்கவோ கூடாது.

மின்சாரத்தை உபயோகிக்கும்போது மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். யாரும் இல்லாத இடத்தில் மின்விசிறியைச் சுற்றவிடுவதும், தேவையற்ற இடங்களில் மின்விளக்குகளை எரியவிடுவதும், மின்விளக்கைப் போட்டுச் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்த பிறகு அதை அணைக்க வேண்டிய நிலையில் அணைக்காமல் விட்டுவிடுவதும் பெருந்தவறுகளாகும்.

வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளியில் செல்லும்பொழுது மின்விளக்கையும், மின்விசிறியையும் நிறுத்த மறந்துவிடக்கூடாது. ரேடியோவில் ஒலிபரப்பும், தொலைக்காட்சிப்பெட்டியில் ஒளிபரப்பும் முடிந்ததும், அவற்றைக் கவனமாக அணைத்துவிட வேண்டும்.

எந்த ஒரு பொருளையாவது வாங்கும்பொழுது அல்லது விற்கும்பொழுது அதிகக் கவனம் தேவை. பெறுமானத்துக்கு அதிகமான பணத்தைக் கொடுத்து ஒரு பொருளை வாங்குவதும், பெறுமானத்திற்குக் குறைவான பணத்தை வாங்கிக்கொண்டு ஒரு பொருளை விற்பதும் தவறு.

அந்தக் காலத்தில் 'தாராளம் தண்ணீர் பட்டபாடு' என்று ஊதாரித்தனத்துக்குத் தண்ணீரை உதாரணமாகச் சொல்வார்கள்.



நீருக்கு நெருக்கடியான இந்தக் காலத்தில், தண்ணீரை உதாரித்தனமாகச் செலவிடக் கூடாது. குளிக்கும்போதும், துணிகளைத் துவைக்கும்போதும், கழுவும்போதும் தண்ணீரை அளவோடு உபயோகப்படுத்த வேண்டும். தண்ணீர்க் குழாயைத் திறந்து விட்டுவிட்டு வேறு காரியங்களைக் கவனிக்கப்போவது பொறுப்பற்ற செயலாகும். 'வீட்டைக் கழுவுகிறோம், வாசலைக் கழுவுகிறோம்' என்று குடம் குடமாய்க் கொட்டித் தண்ணீரை வீணாக்கக் கூடாது.

எந்தப் பொருளையும் ஆசைக்காக உபயோகிக்காமல், தேவைக்காக மட்டுமே உபயோகிக்க வேண்டும். அது போலவே எதையும் கவனக்குறைவால் விரயம் செய்யாமல், முறையாகச் செலவு செய்ய வேண்டும்.

கவனக்குறைவும், விரயமும் இருக்கின்ற இடத்தில் பொருள் செல்வம் வளராது; அதற்குத் தட்டுப்பாடு வந்துவிடும். மேற்கூறிய குறைகளை நீக்கிக் கொண்டால், எந்தப் பொருளாக இருந்தாலும் அது நமக்குத் தட்டுப்பாடு இல்லாமல் அபரிமிதமாகக் கிடைக்கும்.

இதை விளக்குகின்ற வகையில் இங்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.

கடலூருக்கு அருகில் இராமாபுரம் என்ற கிராமத்தில் உள்ள ஒரு பண்ணையில், அன்பர் ஒருவர் பயிர்த்தொழில் செய்துவருகின்றார். ஏறக்குறைய இருபது ஏக்கரில் விவசாயம் செய்கிறார் அவர். பயிருக்கு தேவையான தண்ணீர், துளைக்கிணறு மூலமாகக் கிடைக்கின்றது.

1984ஆம் ஆண்டு மின்சார வெட்டின் காரணமாக நாள் ஒன்றுக்கு 4 மணி நேரந்தான் தண்ணீர் இறைக்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. அவருடைய இருபது ஏக்கரில் உள்ள பயிருக்கு நாள்தோறும் பதினைந்திலிருந்து இருபது மணி நேரத்துக்குக்

குறையாமல் தண்ணீர் பாய வேண்டும். நான்கு மணி நேரத்துக்கு மட்டுமே பாயும் தண்ணீரைக் கொண்டு இருபது ஏக்கரில் உள்ள பயிருக்குத் தண்ணீரைப் பாய்ச்ச முடியாது.

'என்ன செய்வது?' என்று புரியாமல் திண்டாடிக் கொண்டிருந்தார் அந்த அன்பர்.

''தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்குக் காரணம் தண்ணீரை விரயப்படுத்துவதுதான். தடுக்கும் வழிமுறைகளைக் கையாண்டால், தண்ணீர்த் தட்டுப்பாடு எந்த விதத்திலாவது நீங்கிப்போகும்" என்று மற்ற அன்பர்கள் அவருக்குச் சொன்னார்கள்.

'விரயத்தை தடுத்தால் எப்படி உடனே அதிகமான தண்ணீர் கிடைக்கும்?' என்பது அந்த அன்பருக்குப் புரியவில்லை. ஆனாலும், 'விரயத்தைத் தடுப்பதில் தவறேதும் இல்லை. அது நல்லதுதான். ஆகவே தண்ணீர் விரயத்தைத் தடுத்துத்தான் பார்க்கலாமே!' என்று எண்ணிச் செயல்பட ஆரம்பித்தார்.

தண்ணீர் செல்லும் குழாயில் எப்போதும் தண்ணீர் கசிந்து, வீணாகிக் கொண்டிருக்கும். அந்தக் கசிவை அடைத்து, நிலத்தில் முழுமையாகத் தண்ணீர் பாயும்படிக் குழாயைச் சரி செய்தார். பயிருக்குத் தண்ணீர் கட்டும் ஆட்கள் தண்ணீரை அநாவசியமாகப் பாய விட்டுவிட்டு, மடையை உரிய நேரத்தில் அடைக்காமல் நின்றுகொண்டிருப்பார்கள். அவர் அதைக் கவனித்து, அந்தக் குறையையும் நீக்கினார். அதற்குப் பிறகு தண்ணீர் எந்தவித விரயமும் இல்லாமல் நிலத்தில் பாய்ந்தது.

அவர் மறுநாள் வழக்கம்போல மோட்டாரைப் போட்டுத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தார். நான்கு மணி நேரமாகிவிட்டது. 'மின்சாரம் நின்றுவிடும்' என்று நினைத்து மோட்டாரை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்தார். ஆனால் மின்சாரம் நிற்கவில்லை. ஐந்து மணி நேரம் முடிந்தது. மோட்டார் ஓடிக்கொண்டிருந்தது. ஆறு மணி நேரம் ஆயிற்று. அப்போதும் அது தொடர்ந்து



ஓடிக்கொண்டிருந்தது. பதினான்கு மணி நேரம் ஓடிய பிறகுதான் மோட்டார் நின்றது.

இதை அவரால் நம்பவே முடியவில்லை. நேற்று வரை நான்கு மணி நேரத்துக்குக் குறைக்கப்பட்ட மின்சாரம், இன்று எப்படித் திடீரெனப் பதினான்கு மணி நேரம் வரை நீடித்தது?

இதை அவராலும் புரிந்துகொள்ள முடியவில்லை; மற்றவர்களாலும் புரிந்துகொள்ள முடியவில்லை.

அன்று மட்டுந்தானா அந்த அற்புதம்? இல்லை, அதற்குப் பிறகு ஒவ்வொரு நாளும் பதினான்கு மணி நேரத்துக்குக் குறையாமல் மின்சாரம் கிடைத்தது.

'விரயத்தைப் போக்கியவுடன் தண்ணீர்த் தட்டுப்பாடும் போய்விட்டது என்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்தார் அந்த நண்பர்.

இதன் மூலம், 'விரயத்தைத் தடுத்து நிறுத்திவிட்டால், எந்தவிதத் தட்டுப்பாடும் இல்லாமல் நமக்குத் தேவையான பொருள்கள் அனைத்தும் கிடைக்கும்' என்பதை அறிந்து கொள்ளலாம்.

## 5. தணிவான பேச்சு

'பேச்சு' என்பது மனிதனுக்குக் கிடைத்தற்கரிய ஒரு சிறந்த கருவியாகும். சாதாரணமாக, 'பேச்சு' என்பது, எண்ணங்கள் ஒலி வடிவமாக வெளிப்படுவதைக் குறிக்கின்றது.

கேட்டவை, பார்த்தவை, மற்ற புலன்களால் அறிந்தவை ஆகிய யாவும் எண்ணங்களாக உருவெடுத்து நம் மனத்தில் இடம் பெறுகின்றன. நாம் இந்த எண்ணங்களை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளும்பொழுது, அது ஒலி வடிவம் பெற்றுப் பேச்சாக வெளிப்படுகின்றது.

'பேச்சு என்றால் எண்ணங்களை வெளியிடும் ஓர் உபாயமேயன்றி வேறு இல்லை' என்று பாமர மக்கள் கருதுகின்றார்கள். அதனால் அவர்கள், 'பேச்சு கவனத்துக்குரிய ஒரு செயல்' என்பதைப் புரிந்துகொள்வதில்லை.

பேச்சுக்கு மூன்று அம்சங்கள் உள்ளன. (1) பேசப்படும் கருத்து அல்லது விஷயம்; (2) பேசப்படுகின்ற விதம்; (3) பேச்சினால் ஏற்படும் விளைவு. கருத்துக்கு ஏற்பப் பேசப்படுகின்ற விதமும், பேசப்படுகின்ற விதத்தைப் பொருத்து அதன் விளைவும் அமைகின்றன. உதாரணமாக, கோபத்தை வெளிப்படுத்தும் பேச்சு சுடுசொற்களாக வெளிப்படுகின்றது. அது மற்றவர்களிடத்தில் பயத்தையோ அல்லது ஆத்திரத்தையோ உண்டாக்குகின்றது. கோபம் கோபத்தை எழுப்புகின்றது. அதற்குச் சுடுசொற்கள் கருவிகளாக அமைகின்றன.

எண்ணங்கள் பேச்சாக வெளிப்படுகின்றன என்று கூறினோம். உணர்ச்சிகளும் பேச்சாக வெளிப்படுகின்றன. எண்ணங்களும், உணர்ச்சிகளும் தாமாக மனத்தில் தோன்றி, தாமாகவே மறைகின்றன. அவற்றின் மீது நமக்கு எந்தவித ஆதிக்கமும் இருப்பதில்லை. அது மட்டுமன்று, எண்ணங்களும், உணர்ச்சிகளும் வெளிப்பட்ட பின்பு ஏற்படும் விளைவுகளின் மீதும் நமக்கு ஆதிக்கம் இல்லை. கோபம் பொங்கிவரும்போது கோபமான சொற்கள் வெளிப்படுகின்றன. இவற்றிற்கு இலக்கானவர்கள் கோபம் அடைகிறார்கள். சுடுசொற்களுக்கு இலக்கானவர்கள் கோபம் அடையும்பொழுது, அதை யாரால் தடுக்க முடியும்?

பிறிதோர் இடத்தில், 'வீட்டில் விரும்பத்தகாத சூழ்நிலைக்கு இடம் கொடுக்கக்கூடாது' என்று குறிப்பிட்டிருந்தேன். விரும்பத்தகாத எண்ணங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும் அடிமையான ஒரு சாதாரண மனிதன், எப்படி விரும்பத்தக்க ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த முடியும்? தன் மனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய



திண்மை பெற்ற ஒருவனால் மட்டுமே தன்னைச் சுற்றி விரும்பத்தக்க சூழ்நிலையை ஏற்படுத்த முடியும். அலைபாயும் மனத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது? விரும்பத்தக்க எண்ணங்களும், உணர்ச்சிகளும் மட்டுமே மனத்தில் இடம் பெற வேண்டுமானால், அதற்கு என்ன செய்ய வேண்டும்? இந்தக் கேள்விகளுக்குப் பதில்: தணிவான பேச்சு.

'தணிவான பேச்சு' என்பது தாழ்ந்த குரலில் பேசுவது மட்டுமன்று; அமைதியாகவும், அடக்கமாகவும் பேசுவதையும் குறிக்கும். எதைப் பேசினாலும் அதை எந்த அளவுக்குத் தணிவாகப் பேச முடியுமோ அந்த அளவுக்கு அமைதியாகவும், அடக்கமாகவும் பேச்சைக் கட்டுப்படுத்த வேண்டும். 'அந்தக் கட்டுப்பாட்டை எக்காரணம் கொண்டும் தளர்த்துவது இல்லை' என உறுதி எடுத்துக்கொண்டு, அதன்படி நடக்க வேண்டும். 'விரும்பத்தகாத உணர்ச்சிகளும், எண்ணங்களும் தோன்றும்போதுகூடத் தணிவான பேச்சையே உபயோகிப்பது' என்ற முடிவிலிருந்து விலகாது நிற்க வேண்டும். தணிவான பேச்சின் மூலமாக அவை வெளிப்படும்பொழுது, வழக்கமாக அவற்றால் ஏற்படும் விளைவுகள் பெரும்பாலும் குறைந்துபோய்விடுகின்றன. கோபம் நம்மை ஆட்கொள்ளும்பொழுது அதைத் தணிவான பேச்சின் மூலமாக வெளிப்படுத்தினால், அதன் விளைவு அத்தனை மோசமாக இராது என்பதை நடைமுறையில் பார்க்கலாம்.

எடுத்த எடுப்பில் கோபதாபங்களை முற்றும் களைவது என்பது இயலாத காரியம். ஆரம்பத்தில் வேண்டாத எண்ணங்களோ, உணர்ச்சிகளோ தோன்றிக் கொண்டிருந்தால், அதற்காக வருந்த வேண்டாம். தடுக்க முடியாவிட்டாலும், அவற்றைத் தணிவான பேச்சின் மூலமாகக் கட்டுப்படுத்தி வெளிப்படுத்தலாம். முடிவில் அவை நம்மை அணுகா. பேச்சில் உள்ள அமைதியும், தூய்மையும் மெல்ல மெல்ல மனத்தில் புகுந்து அங்கே நீங்காத இடத்தைப் பெற்றுவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. அமைதியும்,

தூய்மையும் இடம் பெற்ற பிறகு மனத்தில் வேண்டாத எண்ணங்களும், உணர்ச்சிகளும் தோன்றமாட்டா.

சொல் அடங்க, மனம் அடங்கும்; மனம் அடங்க உள்ளும், புறமும் அமைதி குடிகொள்ளும்; அமைதியுள்ள இடத்தில் செல்வமும், சுபிட்சமும் பெருகும்.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

''கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்''. நாம் அன்னையை ஏற்றதன் முழுமை நம் சூழலில் அன்னை கொப்பளித்து எழுதல் காண்பிக்கும்.

ரோஜா தோட்டத்தை மணம் அறிமுகப்படுத்த வேண்டாமா?

## ஸ்ரீ அரவிந்த சுடர்

யோக வாழ்க்கை: 'யோக வாழ்க்கை' எனும் நூல் *The Life Divine* தத்துவங்களை வாழ்க்கைக்கு ஏற்றவாறு மாற்றி வழங்குகிறது. Rapid Book Opening இந்நூலைப் பிரித்துப் பார்த்தால் மனத்தைப் பிரதிபலிக்கும். என்ன செய்யலாம் என்பதைச் சுட்டிக்காட்டும்.



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/48) மனம் தானிழந்த சத்தியஜீவியத் தொடர்பைப் பெற்றால் நமக்கு அந்த ஞானம் எழும்.**

☆ **இழந்த தொடர்பு இல்லாத ஞானம் தரும்.**

❁ ஒரு ஜெர்மானியர் போரில் கைதியாக ஷாங்காய் நகரில் அகதி முகாமிலிருந்தார்.
இவர் டாக்டர் பட்டம் பெற்றவர்.
இவருக்கு ஜெர்மனி மொழி தவிர வேறெதுவும் தெரியாது.
தண்ணீர் குடிக்கவும், சாப்பாடு பெறவும், பேப்பர், பேனா பெறவும் எவரிடமும் பேச முடியாது.
அகதி முகாமில் அத்தனை வசதியுண்டு.
கேட்டுப் பெறும் மொழி தெரியவில்லை.
தொழில் நிபுணர்கள் டாக்டர், வக்கீல், அறிஞர், மேதை, அரசியல் தலைவர்கள் மொழி தெரியாமல் தன்னைப் போல் திணறுவதைக் கண்டார்.
அவர் அமெரிக்கா வந்து சேர்ந்தார்.
சர்க்காரில் நிதி மந்திரியானார்.
அவர் எழுதிய புத்தகம் லட்சக்கணக்காக விற்றது.
ஓய்வு பெற்று ஒரு கம்பனி ஆரம்பித்தார்.
அதன் செலாவணி 50 கோடி ரூபாய்.
எந்தத் திறமையும் பலிக்காத இடம் மொழி தெரியாத அகதி முகாம்.
திணறும் இளைஞர்களைக் கண்டால் ஷாங்காயில் உன்னால் ஜெயிக்க முடியுமா எனக் கேட்பார்.

❉ சேலத்து மூதாட்டி குருக்ஷேத்திரத்தில் வழி தவறி திணறிய பொழுது அவருக்கு உதவும் சக்தி ஒன்றில்லை எனக் கண்டார்.

முடிவாக அன்னை உதவினார்.

❉ மனிதனை அன்னை நாடி வருகிறார்.

மனிதன் அன்னையின் தொடர்பை இழந்தவன்.

சேலம் பாட்டி 'மதர்' என்று கூறிய க்ஷணம் தமிழ் காதில் விழுந்தது. பிழைத்தார்.

***இழந்த தொடர்பைப் பெற்றால் இல்லாத வசதி வரும்.***

❉ பிரம்மம் சிருஷ்டித்தது.

முதற்கட்டமாக அது இயற்கையாயிற்று.

அந்த இயற்கையின் உருவம் சத்.

சத், சத்; சித், ஆனந்தமாகி சச்சிதானந்தமாயிற்று.

சச்சிதானந்தம் அகம், புறமாகப் பிரிந்து சத்தியஜீவியமாயிற்று.

சச்சிதானந்தம் அகம்.

சத்தியஜீவியம் புறம்.

சத்தியஜீவியம் அகம் புறமாகப் பிரிந்தது.

அவற்றிடையே மனம் உற்பத்தியாயிற்று.

மனம் சத்தியஜீவியத்தினின்று எழுந்தது.

அத்தொடர்பை சிருஷ்டியில் இழந்தது.

பரிணாமத்தில் அதை மீண்டும் பெறலாம்.

பெற்றால், இல்லாத ஞானம் எழும்.

❉ அதன் பிரதிபலிப்பு, சாயலை - வாழ்வின் எல்லா நிலைகளிலும் காணலாம்.

யானையைக் கண்ட குருடனும், நகரத்தை அறியாத கிராமப்புறத்து மனிதர்களும், பாங்கு உதவியைப் பெறாத மக்களும், உலகில் உள்ள நிலையை அறியாத மேலை நாட்டாரும், ஆயிரம் வகையில் இருந்த தொடர்பை இழந்தவர்.

❉ டார்சி உயர்ந்த உள்ளம் பெற்ற உயர்குடிப் பிறந்து அதை இழந்தவன்.



இழந்தவன் அதை மீண்டும் பெற்று உயர்குடிப் பிறந்தவ-னினும் உயர்ந்தவனானான்.

❉❉❉

## II/49) முரண்பாட்டை உடன்பாடாகக் கண்டால் அதுவே ஆரம்பம். இது சிந்தனையை ஸ்தம்பிக்கச் செய்யும் - முனிவர்.

☆ **முரண்பாட்டை ஏற்கும் முனிவர் மௌனம்.**

❉ உலகில், சிருஷ்டியில் மிகப்பெரிய முரண்பாடு இன வேறுபாடு - ஆண், பெண்.

❉ அதுவே உயர்ந்த உத்தம உடன்பாடு.

❉ முரண்பாடு கூப்பாடு - தூரத்திலிருந்து எழுப்பும் குரல்.

❉ மனிதன் சத்தியஜீவியத்தை எட்ட நான்கு நிலைகளைக் கடக்க வேண்டும்.

❉ கடந்தபின் பொன் மூடியை களைய வேண்டும்.

❉ February 29, 1956இல் அன்னை பொன் கதவையும், பொன் மூடியையும், பொன் சுத்தியையும் கண்டார்.

❉ சுத்தியால் மூடியைத் தகர்த்தார்.

❉ பொன்னொளி வெள்ளமாக உலகில் பரவி பூமியைச் சூழ்ந்தது.

❉ உலகில் தமஸ் - சோம்பேறித்தனம் - எழுந்து அதை விழுங்கியது.

❉ மூடி உடன்பாடல்ல, முரண்பாடு.

❉ அதுவே சத்தியஜீவிய வாயில்.

❉ மூடியே முடிவானாலும், முனிவர் மனநிலையே ஆரம்பம்.

❉ முனிவர் மௌனத்திற்குரியவர்.

❉ அடுத்தவர் ரிஷி.

❉ ரிஷிக்குரியது திருஷ்டி.

- ரிஷிக்கு அடுத்தவர் யோகி.
- யோகிக்குரியது நேரடி ஞானம் (intuition).
- நேரடி ஞானத்திற்குச் சிந்தனையோ, மௌனமோ, ஜோதியோ தேவையில்லை.
- அது ஞானத்தை நேரடியாகப் பெறும்.
- அடுத்த நிலைக்கு ஞானம் தேவையில்லை.
- அது அவதாரப் புருஷனுக்குரியது.
- அவதாரம் ஞானமுடையது.
- அவதாரம் ஞானம் பெற்றிருந்தாலும், அஞ்ஞானமும் அந்த லோகத்திற்குரியது.
- கிருஷ்ண பரமாத்மா அவதாரம்.
- கிருஷ்ண பரமாத்மா பாண்டவர், கௌரவர் முரண்பாட்டை உடன்பாடாக்கினார்.
- அதையடைய அவர் கௌரவர்களை அழித்தார்.
- கௌரவர்களை அழிக்காமல் அந்த உடன்பாட்டை நாட, கௌரவர்கள் திருவுருமாற வேண்டும்.
- பாரதக் காலத்தில் திருவுருமாற்றமில்லை.
- ஆங்கிலேயன் நாட்டை விட்டுப் போக சம்மதித்தது திருவுருமாற்றம்.
- ஆங்கிலேயன் திருவுருமாறினான். முஸ்லீம்கள் திருவுரு-மாறவில்லை.
- இந்தியா மனம் மாறினால், பாக்கிஸ்தான் திருவுருமாறும்.
- இந்தியா, பாக்கிஸ்தான் பிரிவினை என்பது இந்திய அரசியல் பிரச்சனையல்ல. வர்ணாசிரம தர்மம் அழியும் பிரச்சனை.
- ஜாதி உயர்வு பாக்கிஸ்தானை ஏற்படுத்தியது.
- ஜாதி உயர்வு, தாழ்வை இந்தியா கைவிட்டால் பாக்கிஸ்தான் மீண்டும் நம்முடன் சேரும்.
- அதற்கு முதல் நிபந்தனை மௌனம்.

*தொடரும்....*



# அன்பர் கடிதம்

***ஆனந்தமயி சைதன்யமயி சத்தியமயி பரமே!***

உயர்திரு கர்மயோகி அப்பா அவர்களின் திருவடிகளில் இக்கடிதத்தினைச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

என் தாயார் ஜனககுமாரி அவர்கள் 1993ஆம் ஆண்டு தஞ்சை தியான மையத்தின் மூலம் அன்னையை அறிந்தார்கள். என் தாயார் குடும்பத்துடன் கணவர், பையன், மருமகள் மற்றும் பேரனுடன் திருச்சியில் வசிக்கிறார்கள். 1993ஆம் ஆண்டு என் தங்கையின் திருமணம் டிசம்பர் மாதத்தில் அன்னையின் கருணையால் இனிதே நடைபெற்றது. மூத்த தம்பியின் திருமணம் அனைத்து உறவினர்களின் வற்புறுத்தலால் கடைசி அண்ணனின் மகளை மணம்புரிந்து வைத்தார். அவர்களுக்கு business செய்ய பணமும் ஏற்பாடு செய்து கொடுத்தார்.

சில வருடங்களுக்குப் பிறகு இளைய தம்பியின் திருமணம் அன்னையின் அருளால் நடைபெற்றது. இளைய தம்பியின் திருமண நிச்சயதார்த்தத்திற்குப் பிறகு businessஇல் ஏற்பட்ட பிரச்சனையைக் காரணம் காட்டி அம்மாவை அழைத்துச் சென்று Power of Attorneyஇல் கையெழுத்தை வாங்கினார். இதை வைத்து திருச்சியிலுள்ள பெரிய வீடு, 1 கிரவுண்டு மனை, தஞ்சையிலுள்ள பூர்வீகச் சொத்து அனைத்தையும் எழுதி வாங்கிவிட்டார்கள். எல்லா சொத்துக்களையும் இழந்த பிறகு இளைய தம்பி அம்மா, அப்பாவை அழைத்துக்கொண்டு வேறு வாடகை வீட்டிற்குச் சென்றுவிட்டார்.

இவைகளுக்கு முன்பு, ஒரு வயதான பெண்மணி என் தாயாரின் வீட்டு வாசலில் வந்து நின்று, “உன் பெரிய பையனை வைத்து உன்னை அழிக்கப் பார்க்கிறார்கள்'' மற்றும் “ஜாக்கிரதையாக இரு” என்றும் கூறினார்கள். அப்பொழுது இதன் விவரம் என் தாயாருக்குப் புரியவில்லை. எல்லாவற்றையும் இழந்த

பின்பு இதை எங்களிடம் தாயார் கூறினார். மேலும் சென்னை மாம்பலத்தில் நடைபெற்ற இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை தியானத்தில் அன்னையின் திருப்பாதம் தெரிந்ததாகவும் மற்றும் புல்லாங்குழல் ஓசைக் கேட்டதாகவும் கூறினார்கள்.

பிறகு அன்னையை மட்டுமே வாழ்வில் ஏற்றார்கள். என் அம்மாவிற்கு ஹார்ட் அட்டாக் வந்தது. தஞ்சை தியான மையத்திற்குத் தகவலை தொலைபேசியில் தெரிவித்தோம். அவர்கள் கூட்டுத்தியானம் செய்தனர். The Mother's Service Societyக்கும் தந்தி அனுப்பினோம். அன்னையின் அருளாலும், அப்பாவின் ஆசியாலும் என் தாயார் உயிர் பிழைத்தார். என் தாயார் ICUவில் இருந்தபொழுது மலர்களின் வாசனையை உணர்ந்ததாகக் கூறினார்கள்.

உறவினர்களின் அவச்சொல்லுக்கு ஆளாகி, அன்னையை மட்டும் வாழ்வில் ஏற்று, தஞ்சை தியான மையப் பொறுப்பாளரின் ஆலோசனைப்படி மூன்று நாள் தியானம் செய்தார்கள். 1991ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற என் தந்தைக்கு பென்சன் 50% மட்டுமே கிடைத்தது. அன்னையிடம் பிரார்த்தனை செய்த பிறகு என் தாயாரின் அண்ணன் மகன் மூலம் அதற்குரிய ஏற்பாடுகளை அன்னை செய்து கொடுத்தார்கள்.

-- S. தமிழரசி, சென்னை 33.

❋❋❋

**ஜீவிய மணி**

***வலி படுவது அகந்தை மட்டுமே.***





## *Page 40* தெய்வீக ஆத்மா தன்னைப் போன்ற விடுதலை பெற்ற ஆத்மாவில் தன்னைப் பெருக்கிக் கொள்கிறது

- உலகம் பரந்து விரியும் உருவமுள்ளது.
- பூரணம் பூர்த்தியாக பக்கவாட்டிலும் உயரத்திலும் பூரணம் தன்னை விரிவுபடுத்த வேண்டும்.
- ஒருவனுடைய நகை கடை பெரும்பலன் கொடுத்தால் அநேக நகை கடைகள் எழுகின்றன.
- வாழ்வு பூரணம் பெற ஆரம்பித்தால் பல கோணங்களிலும் அது விரிவு பெறும்.
- ஒரு வீட்டில் ஒருவர் புதிய தொழில் ஆரம்பித்தால், படிப்பை நிறுத்தியவன் படிக்க விரும்புகிறான்.
- பயிரிடுபவன் புதிய பயிர் செய்ய முயல்கிறான்.
- ஊரில் இதுவரை இல்லாத பழக்கங்கள் உற்பத்தியாகி உயிர் பெறுகின்றன.
- பஞ்சாயத்துத் தலைவர் MLAஆகப் பிரியப்படுகிறார்.
- உயிர் ஓரிடத்தில் எழுந்தால் அனைவருக்கும் அனைத்திற்கும் உயிர் வரும் என்பது சட்டம்.
- உயிர் என்பது பொது, அனைவரும் பொதுவாகப் பெறுவது.
- குளத்தில் கிழக்குக் கோடியில் ஒரு அடி நீர் மட்டம் உயர்ந்தால் மேற்கே, தெற்கே, வடக்கேயும் உயரும்.
- ஓர் அடி உயர புது வாழ்வு எழும். இதுவரை குளத்திலில்லாத வகை செடிகளும் மீன்களும் உற்பத்தியாகும்.

- இம்மாற்றம் பூமி எங்கு மட்டுமில்லாமல், பிற கிரகங்கட்கும் பரவுமா என்ற கேள்வியை பகவான் எழுப்புகிறார்.
- உலகில் ஒரு மனிதன் பூரணம் பெற்றால் அவனால் உலகமே முன்னேறும் என *சாவித்திரியில்* (பக்கம் 531) பகவான் கூறுகிறார்.
- இந்திய சுதந்திரம் ஆசிய ஆப்பிரிக்க நாடுகட்குப் பரவியது.
- ஹிப்பி இயக்கம் உலகமெங்கும் பரவியது.
- மாணவர் போராட்டம் நாடு முழுவதும் பரவி தொழிலாளர் போராட்டமாகவும் பெண்கள் இயக்கமாகவும் மாறுகிறது.
- 1946இல் அகில இந்திய இரயில்வே தொழிலாளர் போராட்டம், அகில இந்திய தபால் ஊழியர் போராட்டமாகவும், அகில இந்திய மாணவர் இயக்கமாகவும், கப்பல் படை ஊழியர் எழுச்சியாகவும் மாறி, 1947இல் சுதந்திரத்திற்கு வழிகோலியது.
- அதனால் தனி மனிதனே மூலம், அவனே இரகஸ்யம் என்கிறார் பகவான்.
- ரஷ்ய புரட்சி உலகெங்கும் பொது உடைமையைக் கொண்டு வந்தது.

❃❃❃

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## வந்தது போகாது

- வாழ்க்கையில் வாய்ப்பு வருவதில்லை.
- சுதந்தரம் வருமுன் வாழ்ந்தவர்கள் வாய்ப்பு எனக் கேட்டதில்லை.
- **இருப்பதைக் காப்பாற்றினால் போதும் என்பது அன்றைய நம்பிக்கை.**
- சுதந்தரம் வந்தது, சுபிட்சம் வர ஆரம்பித்தது.
- சுதந்தரம் வந்தபின் வந்தது சத்தியஜீவியம்.
- சுதந்தரம் வந்தபின் வாய்ப்பு வர ஆரம்பித்தது.
- வாய்ப்பு வருவது ஊர் சந்தர்ப்பத்திற்கேற்ப வரும்.
- ஊர் உனக்கு வரும் வாய்ப்பை அனுமதிக்கவே அனுமதிக்காது.
- ஊர் மனநிலையை வீட்டிலும் காணலாம்.
- வீட்டு **மனநிலை உன் உள் மனநிலை.**
- உலகம் கட்டுப்படாது.
- வீடு கட்டுப்படவே படாது.
- நம் மனம் நமக்குக் கட்டுப்பட முடியும்.
- மனம் கட்டுப்பட்டால், மகத்தான காரியம் நிறைவேறும் - வந்தது பலிக்கும்.
- மனம் மற்றவர் போலிருக்கும்.
- உலகம் சரி எனக் கூறும்.
- வீட்டு மனிதரை ஆதரிக்கும்.
- வருவது சரியாக வரக்கூடாதா? இப்படியா வர வேண்டும் என ஓலமிடும்.
- அது வந்ததை இழக்கும் வழி.
- வந்தது போகாது, போகவே போகாது, நாமே மறுக்கவில்லை-யெனில் போகாது.
- வாய்ப்புக்கேற்றவாறு மனநிலையைச் சரிசெய்பவனுக்குப் பலிக்கும்.
- பலிப்பதற்குத்தான் வருகிறது, பலிக்காததற்கு வரவில்லை.
- அன்னை மூலம் வருவது அவசியம் பலிக்கும்.
- காதில் விழுந்த சொல்லும் வாய்ப்பு என அறிவது பேரருள்.

***வராததெல்லாம் வரும் வழி சத்தியம் நிறைந்த மனம்***
***பிறர் நலம் இடையறாது பேணுவதாகும்.***

❁❁❁

## பெம்பர்லி

*Pride and Prejudice* கதையில் டார்சியின் அரண்மனை பெம்பர்லி.

அதன் ஆண்டு வருமானம் £10,000. எஸ்டேட் 4000 ஏக்கர். 10 மைல் சுற்றளவு.

எலிசபெத் £ 2000 வருமானமுள்ள லாங்பார்ன் எஸ்டேட்டில் ஐந்து பெண்களில் ஒருவராகப் பிறந்து பெருங்குடி மகளாக சகல சௌகரியங்களையும் அனுபவித்து வளர்ந்தவள்.

சீதனமாகத் தாயார் மூலம் அவளுக்கு வந்தது £ 1000. அதன் வருஷ வருமானம் £ 50.

எஸ்டேட்டில் பிறந்து வளர்ந்து அனுபவித்தாலும் உரிமை அவளுக்கில்லை.

அவளுடைய சித்தப்பா மகனுக்கே எஸ்டேட் தகப்பனாருக்குப் பின் சேரும்.

தமக்கைக்கு 23 வயது. அழகி. திருமணமாகவில்லை.

வரன் என இதுவரை அவளுக்கோ, மற்ற தங்கைகட்கோ, தனக்கோ வரவில்லை.

எஸ்டேட்டை உரிமையுடன் பெறப்போகும் சித்தப்பா மகன் காலின்ஸ் கோமாளி.

அவன் மட்டும் இவளை மணம் புரிய முனைந்தான். அது அவளுக்குப் பொறுக்க முடியாத அவமானம்.

- அவள் பொய்யே சொல்லமாட்டாள்.
- அவள் மனம் ஒளியில் நிலைபெற்றது.
- ஒளியின் சுதந்தரம் அவளை ஊக்குவித்தது.
- **ஒளி பொருந்திய மனம் மெய் மட்டும் கடைப்பிடித்தால் செல்வம் அவளைத் தேடி வரும் என்பது சட்டம்.**
- இவள் விஷயத்தில் பெரும் செல்வம் தேடி வந்ததை, வந்த வழி சரியில்லையென அவள் மறுத்தபின், வழியைச் சரிசெய்து மீண்டும் வந்தது.

  அந்த 4000 ஏக்கர் இன்று இந்தியாவிலும் 400 கோடி பெறும். இங்கிலாந்தில் மேலும் விலையுண்டு.

***முழு சத்தியம் முழு மனதில்***
***முழு அதிர்ஷ்டமாக வந்து முடியும்.***

❁❁❁

Vol. I Issue 8 November 2011
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

**புதிய வெளியீடுகள்**

**ESSAYS ON ACCOMPLISHMENT** ரூ.150/-
**N.Asokan**

**கர்மயோகியின்**

**அன்னையின் ஆன்மீகப்பரிசு** ரூ.100/-
**லைப் டிவைன் - கருத்துகள்** ரூ.100/-
**பரம்பொருள் III** ரூ.200/-
**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-
**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-
**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
(CONCISE TRUISMS)
**N.Asokan**

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

| பாண்டியில் | சென்னையில் |
|---|---|
| மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி, | மாம்பலம் தியான மையம், |
| 5, புதுவை சிவம் தெரு, | 23/1, மேற்கு சாலை, |
| வெங்கட்ட நகர் விரிவு, | மேற்கு C.I.T. நகர், |
| புதுச்சேரி - 605 011. | சென்னை - 600 035. |
| ✆ : (0413) 2212443, 2210514 | ✆ : (044)-24347191 |

Vol. I Issue 8 November 2011

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## நவம்பர் 2011